# உயிரே.. உயிரே.. உருகாதே!

## 1

**ப**ழக்கமில்லாத பட்டுவேட்டி இடுப்பிலிருந்து அடிக்கடி நழுவிக் கொண்டிருந்தது. அது மட்டுமல்ல... விக்னேஷின் மனசும் எதிலும் நிலைகொள்ளாது அவனை அலைக்கழித்தது. உள்ளே வரவிருக்கும் அழகுப் பெட்டகம் என்ன செய்யும்.. முகத்தில் விதைக்கப்பட்ட செம்மையுடன் பட்டுச் சேலை சரசரக்க வருவாளா... மரபுகளால் விலங்கிடப்பட்ட பெண் போல் பால் சொம்பினை என்னிடம் தந்து காலில் விழுந்து பின் நான் குடித்த பால் எச்சத்தினை தானும் பருகுவாளோ.



'க்ளிக்.'

கதவு திறக்கும் சப்தம் கேட்டது. எதிர்பார்ப்போடு திரும்பிய விக்னேஷ் சற்று தடுமாறித்தான் போனான்.

தயக்கத்தை வெகுவாய் நடையில் காட்டி அடியெடுத்து வரும் அழகினை வைத்த விழி மாறாமல் பார்த்தான்.

பால் சொம்பினை மாயாவிடம் வாங்கி டேபிளில் வைத்தான். அவள் கைகளைப் பற்றி இழுத்து கட்டிலில் அமர வைத்தான். ஸ்பரிச சுகம் இருவரின் கைகளுக்குள்ளும் ஊடுருவியது.

''என்னைப் பிடிச்சிருக்கா மாயா.''

''.........'' விழிகளை உயர்த்தி சிரித்தாள்.

''உம் சொல்லு.. டூ யூ லைக் மீ.''

''உம்''

''இந்த உம்.. ஆங்.. இதெல்லாம் வேண்டாம். வார்த்தையால் சொல்லு.. பிடிச்சிருக்கா?'' அவன் குரலில் உள்ள மென்மை அவளுக்கு தைரியத்தைக் கொடுத்தது.

''உங்க பேரு, உங்க ஹேர் ஸ்டைல்... அப்புறம் உங்க கண்ணு, உங்க கலர்... உம்.. உங்ககிட்டே உள்ள எல்லாமே பிடிச்சிருக்கு.''

''எல்லாமேன்னா...''

''உங்க நல்ல மனசு...''

''மனசா? அதெப்படி உனக்குத் தெரியும்?''

''டாடி சொல்லியிருக்கிறார்.. நிறைய சொல்லியிருக்கார்.''

''மாயா''





''உம்''

''நீ என் முதலாளி பொண்ணு... செல்வ சீமாட்டியான உன்னால என்னோட குடும்பம் நடத்த முடியுமா?''

மாயா சோழிகளை குலுக்கிப் போட்டது போல் 'க்ளுக்' என சிரித்தாள்.

''டாடி, மம்மியைக் கல்யாணம் பண்றப்ப தியேட்டர்ல டிக்கெட் கிழிக்கிற வேலையாம். அவரால முடிஞ்சுதுன்னா... எங்க கம்பெனியையே உங்க நிர்வகிப்புல வச்சிருக்கிற மேனேஜர் நீங்க.. உங்களால முடியாதா... நான் பக்கத்தில் இருக்கிற போது...''

விக்னேஷ் சிலிர்ப்பாய் அவள் கரம் பற்றினான்.

''அது சரி.. என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா!''

''உங்கிட்டே இதெல்லாம் பிடிச்சிருக்குன்னு இனம் பிரிக்க தெரியலை. சொல்லப்போனால் உன் நகத்தில் தூசு இருந்தா அதுகூட எனக்குப் பிடிக்கும். ஏன்னா அது உன் காலில் இருக்கே.''

அவன் சொன்னதும் தான் தாமதம்... சந்தோஷம் தாளாமல் வேகமாய் அவன் மார்பில் கோழிக் குஞ்சாய் ஒட்டிக் கொண்டாள். கிறக்கத்தில் அவள் முகத்தை நிமிர்த்தி உதடு தேடி முத்தமிடத் துவங்கினான் விக்னேஷ்.

'படக்'கென கதவு திறக்கும் சத்தம் கேட்டு.. அதிர்ச்சியோடு இமை திறந்தான். பால் செம்போடு மாயா உள்ளே தள்ளப்பட்டு... வெளியே கதவு தாழிடப்படும் சத்தமும் கேட்டது.

'ச்சே' இவ்வளவு நேரம் கண்டது கனவா? டன் கணக்கில் விக்னேஷின் முகத்தில் அசடு வழிந்தது. முதல் இரவில் தூங்கி



கனவு கண்டவன் இந்த உலகில் தானாகத்தான் இருக்கும் என்று வெட்கமும் வந்தது. 'கனவே இப்படி இனிக்கிறதே.. நினைவு எப்படி இருக்கும்?' எதிர்பார்ப்போடு நிமிர்ந்து உட்கார்ந்தான். பாவம் கற்பனைக்கும், கனவுக்கும் மட்டுமே சுகம் அதிகம். நிஜம் எப்போதும் இனிக்காது. சுகம் கொடுக்காது.

மாயா பால்செம்பை டேபிள்மேல் வைத்துவிட்டு.. அவனுக்கு அருகேயும் இல்லாமல் விலகியும் இல்லாமல் உட்கார்ந்தாள். பாலைக் கையில் தருவாள். காலில் விழுவாள் என்று எதிர்பார்த்தவனுக்கு சின்ன ஏமாற்றம். இந்தக் காலத்தில்.. இதெல்லாம் எதிர்பார்ப்பதே முட்டாள்தனம்' என்று தனக்கு சமாதானம் சொல்லிக் கொண்டான்.

''மாயா!''

நிமிர்ந்து அவனை நேருக்கு நேராகப் பார்த்தாள். அவனின் கருவிழியில் தன் உருவம் தெரிவதை, பார்க்கத் தவறவில்லை. தன்னைப் பார்க்கும் அந்த திராட்சை விழிகளை மென்மையாய் முத்தமிட்டடா என்று ஹார்மோன்கள் அவனை முடுக்கின.

''மாயா'' அழைத்தான்.

'என்ன' என்பது போல் பார்த்தாள்.

''என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?''

''.....'' எதுவும் பேசாமல் பார்த்தாள்.

''சொல்லும்மா... என்னைப் பிடிச்சிருக்கா'' மீண்டும் கேட்டான்.

''இட்ஸ் டூ லேட்'' என்றாள்.

''ஏன்?''

''தாலி கட்டிட்ட தைரியமா...? இப்போ நான் என்ன சொல்லணும்னு எதிர்பார்கிறீங்க... பிடிச்சிருக்குன்னா.. பிடிக்கலைன்னா?''

''என்ன சொல்ற!''

''புரியலையா...? புடிக்கலைன்னு சொல்லிட்டா.. எந்திரிச்சி போன்னு சொல்லுவிங்களா? இல்லை நீங்க வெளியே போயிடுவீங்களா?''

சில நிமிடம் ஒன்றும் புரியாமல் பார்த்தான்.

''என்னம்மா சொல்ற?''

''இந்தக் கேள்விக்கு அவசியம் என்ன?''

''ஏன்?''

''தாலி கட்டும்வரை யாருக்கும் கேட்கணும்னு தோணாதது. தனியறையில் உங்களுக்கு கேட்கணும்னு தோணிச்சே... அந்த வகையில் ரொம்ப தேங்க்ஸ்.''

''மாயா! நீ சொல்றதைப் பார்த்தா.. உனக்கு விருப்பம் இல்லாமல் இந்தக் கல்யாணம் நடந்திருக்குன்னு நினைக்கிறேன். பட்... ஐ லவ் யூ மாயா.. ஐ லைக் வெரிமச் யூ.. உங்க வீட்டிற்கு இரண்டு மூன்று முறை வந்திருக்கிறேன். ஜஸ்ட் என்னை நீ கிராஸ் பண்ணிப் போறதப் பார்த்திருக்கிறேன். ஆனா அப்போதெல்லாம் எனக்கு எதுவுமே தோணினது இல்லை. ஆனா எந்த நிமிஷம் உங்கப்பா.. எனக்குத் தான் நீன்னு சொன்னாரோ... அந்த நிமிடம் முதல் ஐ'ம் க்ரேஸி அபௌவ்ட் யூ.. கனவிலேயே குடித்தனம் பண்ணிகிட்டு இருக்கேன்.''

இதழில் லேசாக ஏளனப் புன்னகை ஒன்றை விரியவிட்டாள் மாயா. அவள் கையைத் தன் ஆள்காட்டி விரலால் வருடினான். சட்டென கைகளை இழுத்துக் கொண்டாள்.



''மாயா!''

''ஸாரி.. ஐம் ஸோ டயட்.''

''அதனாலென்ன... படுத்துக்கோ... நான் டிஸ்டர்ப் பண்ணல.. உங்கிட்டே கொஞ்சம் பேசணும்.''

''எதுக்கு.''

''இதென்ன கேள்வி, ஒருத்தர ஒருத்தர் பேசி புரிஞ்சிக்க வேணாமா?''

சிரித்தாள்.

''இன்னைக்கு ஒரு நாள் உட்கார்ந்து பேசினால் புரிஞ்சிக்க முடியுமா?''

''நிச்சயமா.... ஒரு நாள் தேவையில்லை.. ஒரு சில நிமிஷங்களே போதும்'' கலகலவென சிரித்தாள் மாயா.

''ஒரு நாள் இல்லே.. ஒரு வருஷம் உட்கார்ந்து பேசினாலும்.. புரிஞ்சிக்க முடியாது... இந்த உலகத்தில் எல்லாருமே ஏதோ ஓர் காரணத்திற்காக நடிக்கத்தான் செய்றோம். குறிப்பா புருசனுங்க...''

''இல்ல மாயா.. நான் என்ன சொல்ல வர்றேன்னா.''

''ப்ளீஸ்.. வேண்டாம்...''

''மாயா...நீ பேசறதைப் பார்த்தா.. ஏதோ விபரீதமா எனக்குள்ள பிசையுது.. இனிமே...''

''சரி.. படுத்துக்க..'' சொன்னவன் படுக்கையில் இருந்து எழுந்து... அருகில் இருந்த சோபாவில் போய் அமர்ந்து கொண்டான்.

''தேங்ஸ்'' சொன்னவள்.. அப்படியே தலையணையில் தன் தலையை வைத்து..உடலைத் தளர்த்தி நீட்டிவிட்டாள். எதைப்



பற்றியும் கவலைப்படாமல் ஒரு போர்வையை கழுத்து வரை போர்த்திக் கொண்டு கண்களை மூடிக்கொண்டாள். அமைதியாக கொஞ்சநேரம் அவளையே உற்றுப் பார்த்தான்.

தூங்கும்போது தூங்குபவர்களை உற்றுப் பார்க்கக்கூடாது... ஆயுசு கம்மியாகும் என்று அம்மா எப்போதோ சின்ன வயதில் கூறியது நினைவுக்கு வர... பட்டென்று கண்களை மூடித் திறந்தான்.

''விக்னேஷ்!'' அழைத்தாள்.. இவன் புறம் திரும்பாமலேயே...

''என்னம்மா!'' ஆர்வமாய் கேட்டான்.

''லைட் எரிஞ்சா எனக்குத் தூக்கம் வராது.''

எதுவும் பேசாமல் எழுந்து... லைட் ஆப் பண்ணிவிட்டு... மீண்டும் சோபாவிலேயே தன்னை சரித்துக் கொண்டான்.

மாயாவின் அப்பாவின் சொல்லைத் தட்டமுடியாமல்.. தாலிகட்ட சம்மதித்தது தவறோ... ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டோமோ... தடுமாறத் தொடங்கினான். பணத்திற்கு ஆசைப்படவில்லையே.. அமைதியான அன்பான வாழ்க்கையைத்தானே எதிர்பார்த்தேன்... ஆசைப்பட்டேன். திருமணத்திற்கு முன்பே மாயாவைப் பார்த்துப் பேசி இருக்க வேண்டுமோ.. ஒரு பெண்ணின் கனவுகள் கலைய.. விருப்பம் இல்லாத ஜீவனுக்கா தாலி கட்டி இருக்கின்றோம்.. மனம் சஞ்சலம் கொள்ள கொள்ள.. நெற்றியில் வேர்வை பூக்கத் தொடங்கியது.

இதயத்தைப் பார்த்து ஈட்டியைப் பாய்ச்சியது போல் மூச்சுத் தடுமாற ஆரம்பித்தான்.



## 2

கம்பெனியே, ஆகாயத்தை முட்டும் அளவு ஏதோ ஓர் விசித்திர உருவம் வந்து நின்றது போல்.. இமைகளை முடிந்தளவு விரித்து விக்னேஷைப் பார்த்தது... புத்தம்புது மாப்பிள்ளை... நேற்று காலைதான் மண வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தவன்... அதே வேகத்தில் அலுவலகம் வந்து நின்றது.. ஆச்சர்யத்தை விட அதிர்ச்சியைத் தான் கொடுத்தது.

அழகில்லாத பெண்ணைத் திருமணம் செய்தவன் கூட... அவளருகிலேயே இருக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுவான். அப்படி ஒரு காந்தசக்தி மனைவி என்ற உறவுக்கு உண்டு. உலக வழக்கம் இப்படி இருக்க... முதலாளி பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவன். தங்கச்சிலையை தனதாக்கிக் கொண்டவன்... இப்படி வந்து நிற்கின்றானே... ஆச்சர்யக்குறி நேராய் நிமிர்ந்து நின்றது.

'கே.விக்னேஷ், மேனேஜர்' என்று பொறிக்கப்பட்ட கதவில் கை வைத்து தள்ளிகொண்டு உள்ளே நுழைந்தான். கையோடு ஒட்டிக் கொண்டு வந்த சூட்கேஸை மேஜைமேல் வைத்துவிட்டு... தன் இரு கைகளாலும் முகத்தை அழுத்தி துடைத்துக் கொண்டு.. அறையைச் சுற்றி நோட்டம் விட்டான்.

பழைய மேனேஜர் அறையாக இல்லாமல்.. எல்லாம் புத்தம் புதிதாய் மாற்றப்பட்டு, சில லட்சங்களும் அதன் அலங்காரத்திற்கு செலவிடப்பட்டு இருந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தவன்.. நீண்ட பெருமூச்சு ஒன்றை தனதாக்கிக் கொண்டு, டையைத் தளர்த்திவிட்டு... சேரில் அமர்ந்தான். கைகளுக்கு எட்டும் தூரத்தில் இருந்த ஏ.ஸி.யை ஆன் செய்தான். மெதுவாய் ஏ.ஸி.யின் ரீங்காரமும்... ரூம் பர்ப்யூம் வாசமும் அறை முழுவதும் நிறையத் துவங்கியது.

அவன் அனுமதி இல்லாமலேயே அவன் டேபிள் மேல் புகைப்படத்தில் அழகாய் மாயா சிரித்துக் கொண்டிருந்தாள்.

புத்தம் புதிதாய் பளபளத்த அந்த கருப்பு நிற மாருதி தவுசண்ட் மெயின்ரோட்டில் சீராய் வழுக்கிக் கொண்டு இருந்தது. வெகு நிதானமாய் ஸ்டேரிங்கை சுழற்றிக் கொண்டு இருந்தான் விக்னேஷ். சிணுங்கிக் கொண்டு இருந்த ஆடியோ கேசட்டை.. இடதுகையாலேயே மாற்றிப்போட்டான்.

**சேலையில வீடுகட்டவா சேர்ந்துவசிக்க...**

**ஜன்னல் வச்ச ஜாக்கெட் போடவா தென்றல் அடிக்க..**

அந்த வரி பாடல் ஏனோ அவனை சஞ்சலப்படுத்த... பட்டென டேப்பை நிறுத்தினான். மாயாவை எப்படிப் புரிந்து கொள்வது? அவள் மனதில் என்ன இருக்கிறது? எப்படித் தெரிந்து கொள்வது? தனக்கு இப்படிப்பட்ட வாழ்க்கை தேவையா? ஒரு வயதான மனிதரின் ஆஸ்தியை காப்பாற்றப் போய்.. என் சந்தோஷத்தை தொலைத்து விட்டேனா..என்று ஏகப்பட்ட சென்னை பணக்காரர்களின் வாயில் விழுந்து.. கடித்து துப்பப்படும் பெயர் விக்னேஷ். பணத்திற்காக திருமணம் செய்துக் கொண்டான். அதிர்ஷ்டசாலி.. இன்னும் என்னென்னவோ வதந்தி.. அத்தனையும் பொய் என்று தனக்கும்.. அவன் மாமனாருக்கும் மட்டும்தானே தெரியும்! இப்போது வாழ்க்கை மட்டும் அல்ல. கனிந்து கொண்டே அவன்



உதட்டில் உட்கார்ந்து இருந்த சிகரெட்டும் உதட்டை 'சுரீர்' என பதம்பார்த்தது. 'த்தூ... த்தூ.'

ஃப்ரேக்கில் வேகமாய் காலை வைத்தவன். சாலை ஓரமாய் நிறுத்தினான். உதட்டில் சிகரெட் அமர்ந்திருந்த இடத்தில் கொஞ்சம் சாம்பல் தூளும்... கருப்பாய் பொட்டாய் சுட்ட இடம் கன்னிப் போயும் இருந்தது... கார் கண்ணாடியிலேயே உதட்டைப் பார்த்து.. துடைத்துக் கொண்டான்.

நாக்கால் எச்சில் தடவிப்பார்த்தும் எரிந்தது இதழ். தண்ணீர் பாட்டில் எடுத்து.. உதட்டை நனைத்தபடி வயிற்றையும் கொஞ்சம் நிரப்பிக் கொண்டான். கண்களில் மாட்டப்பட்டு இருந்த கண்ணாடியைக் கழற்றி.. சீட்டிலேயே போட்டான். தலையைக் கோதிக் கொள்ள.. கண்ணாடி முன்பு முகத்தைக் காட்டியபோது.. கருவிழி நீர் கசிய மினுமினுத்துக் கொண்டு இருந்தது... இது சிகரெட் கசிவால் வந்த ஊற்றா? இல்லை கல்யாணத்தால் வந்த கலக்கமா? புரியவில்லை.. குழப்பம் என்று வந்துவிட்டால் மனிதன் மனிதனாக இருக்க முடிவது இல்லை. அதுவும் நல்ல மனதுக்காரர்கள்.. விழிகளை மூடக்கூட முடிவது இல்லை. 'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது என்பது வள்ளுவன் வகுத்ததடா' என்று கண்ணதாசன் அனுபவித்துத் தான் எழுதியிருந்தார்.

எத்தனைமுறை மனதிற்கு சார்ஜ் ஏற்றி தைரியப்படுத்தினாலும்.. சின்ன விசயத்தில் கூட பட்டென உறைந்து சிதறிப் போகின்றது.. திரும்ப ஒன்று சேர்க்க.. பாடாய்பட வேண்டி இருக்கிறது. கல்யாண வாழ்க்கை பற்றி கண்ட கனவுகள் எல்லாம்.. இவனைப் பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் பார்த்தது.

அத்தனை நினைவுகளையும் தூசு தட்டுவதுபோல் தட்டிவிட்டு... சாலையில் கவனம் செலுத்தினான். தாஜ் கோர



மண்டலுக்குள் நுழையும்போதும்.. கார்விட்டு இறங்கும் போதும்... உள்ளே நுழையும் போதும்கூட...

தன் ரத்த நாளங்கள் வெடித்து சிதறும் அளவு அதிர்ச்சியை காண நேரிடும் என்று அறியாமல்.. உற்சாகமாய் உள்ளே நுழைந்தான்.

## 3

"டேய்! விக்னேஷ்!" வேகமாய் சத்தத்தோடு தோள் மேல் ஒரு கை விழுந்தது. 'யாராக இருக்கும்' அதிர்ச்சியும் ஆச்சர்யமும் கலந்த உணர்வோடு திரும்பிப் பார்த்தால்... முகேஷ். பள்ளி.. கல்லூரித் தோழன்... கடந்த நான்கு வருடமாகத் தொடர்பில்லை... திடீர் என்று ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் தோளைத் தட்டிக் கொண்டு நிற்கின்றான்.

"ஏ...ய்...ய்.. முகேஷ்.. வாட் எ ப்ளஸன்ட் சர்ப்ரைஸ்!" சந்தோஷத்தில் விக்னேஷ் கூச்சலிட்டான்.

"டேய்.. மெதுவடை.... எப்படிடா இருக்கே" என்று சத்தமாக கேட்டு.. விக்னேஷின் வயிற்றில் வேகமாய் குத்தினான்.

"நீ எங்கே இங்கே?"

"நீ எங்கே இங்கே?" ஆளாளுக்கு மாறி மாறி கேட்டுக் கொண்டனர்.

"ஓ.கே... ஓ.கே... சாவகாசமா பேசலாம்.. வா" என்றபடி விக்னேஷைப் பேசவிடாமல் இடுப்பில் கையைக் கோர்த்துக்



கொண்டு.. ஓரமாய் இருந்த ஒரு டேபிள் கண்ணில் சரியாய் பட.. அதை நோக்கிப் போனான்.

"உம் உட்கார்டா" சேரைக் காட்டினான்.

சந்தோஷத்தில் பேசமுடியாமல் நண்பனுக்கு நேராய் அமர்ந்து கொண்டான். மேலிருந்து கீழாக நண்பனை ஏற இறங்கப் பார்த்தான். நான்கு வருடங்களுக்கு முன்பிருந்த முகேஷ் நன்றாகவே மாறியிருந்தான். வகிடெடுத்து சீவிக் கொண்டு இருந்தவன். முடிகள் குத்துக்கால் இட லேட்டஸ்ட் ஃபேசனுக்கு மாறியிருந்தான். கோடாய் மீசை லென்ஸ் வச்சி பார்ப்பதுபோல் இருக்கும்... இப்போது... அடர்த்தியாய் வெட்டப்பட்டு இருந்தது. இன் பண்ணத் தெரியாதவன்... கதரைத்தவிர வேறு எதுவும் தனக்குப் பிடிக்காது என்பவன். கோட்... சூட்... டை... பிரமிப்பாய் இருந்தது. விக்னேஷ் செய்த அதே எண்ண ஓட்டத்தில்தான் முகேசும் இருந்தான்.

நான்கு வருடத்திற்கு முன்பு பார்த்த விக்னேஷ்.. கொஞ்சம் பூசினார் போல்... கலர் கூடியிருந்தான். கன்னம் எல்லாம் சதைப்பற்றாய் மொழு மொழு என்று இருந்தது. எந்த நேரமும் சிகரெட் சுமந்து, கருப்பாக மாற இன்னும் யோசித்துக் கொண்டு இருக்கும் உதடுகள். வலது கையில் பதினைந்து பைசா கருப்பு கயிரைத் தவிர.. வாட்ச்... ப்ரேஸ்லெட் என்று எதையும் ஏற்காத கைகள். ஃபுல்ஹேண்ட் சர்ட். ஜீன்ஸ் பேண்ட் மட்டும் மிஸ்ஸிங். லைட் ப்ரவுன் சூட்டிங், அணிந்து இருந்தான். வழக்கமான... தூசு.. அழுக்குகளில் இருந்து காத்துக் கொள்ள அணிந்துக் கொள்ளும் கண்ணாடி.. அவன் அணியும் அந்தக் கண்ணாடி அழகானவராக காட்டியது. மெருகு கூடி பளபளப்பாக இருந்தான். நெற்றியில் எப்போதும் இடம்பிடித்து இருக்கும் திருநீர் கீற்று... சிரித்தால் உதடு ஓரத்தில் இருக்கும்.. அதிகப்பிரசங்கி தொற்றுப்பல் இன்னும் அழகாய் சிரித்தது.

''எப்படிடா இருக்க?''

''சூப்பரா இருக்கேன்.. பெங்களூர்ல ரவிக்குமார் புட் ப்ராடெக்ட் இன்டஸ்ட்ரீஸில் சேல்ஸ் எக்ஸ்க்யூட்டிவ்.. கை நிறைய சம்பளம்... கமிஷன்... எக்ஸட்ரா.. எக்ஸட்ரா.. கம் பெனி எம்.டி.யோட பர்சனல் விசயங்களை நான்தான் டீல் பண்றேன். அதனால இன்னும் சலுகைகள் ஜாஸ்தி.. இப்போ கூட அவரோடதான் வந்தேன்.

''எங்கே உன்னோட பாஸ்.''

சுற்றுமுற்றும் பார்த்து.. கண்ணடித்தான்.

''ஆளு ஒரு மாதிரி.. எந்த நேரமும்... பிகரை மடிக்கிறது லேயே.. நேரம் போயிடும்... இப்போகூட ஒரு பொண்ணுக் காகத்தான் மெட்ராஸ் ட்ரிப்.''

''இப்போ எங்கே... இந்த ஹோட்டல்லதானா?''

'உம்.. அங்கே.. அந்த டேபிளைப் பார்'' கை நீட்டி சுட்டிக் காட்டினான்.

சந்தனக்கலர் சுடிதாரில் ஒரு பெண் முதுகு காட்டி இருக்க.. அந்த பெண்ணிற்கு எதிரே சினிமா ஸ்டார் போல்... கலக்க லாய் அசத்தும் நிறத்தோடு ஒரு இளைஞன் அமர்ந்து இருந் தான்.

''ஆள் பந்தாவா இருக்கார்.. ஒரு பிகர் என்ன.. ஆள் சைட்ல பார்த்தாலே நூறுபிகர் மடியும்... அதை விடு பெரிய இடத்து விசயம்.. நீ எப்படிடா இருக்கே..? அப்பா, அம்மா, தங்கச்சி எல்லாம் எப்படி இருக்காங்க?''

''ரொம்ப நல்லா இருக்காங்க.... போன வருசம்தான் தங்கச்சிக்கு கல்யாணம் பண்ணினேன்.. மாப்பிள்ளை காலேஜ் வாத்தியார்.''



''நீ?''

''சாமி!... வேண்டாம்பா.. இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம், பண்ணிக்கிற ஐடியாவும் இப்போதைக்கு இல்லை... ஆமாம். உன்னைப்பற்றி நீ எதுவுமே சொல்லலை.. அப்பா அம்மா எப்படி இருக்காங்க? கல்யாணம் என்ற பெயரில் ஒரு பொண்ணு கிட்ட மாட்டிக்கிட்டியா?''

சிரித்தான்.

''என்னடா சிரிக்கிற?''

''அப்பா, அம்மா இன்னும் கிராமத்தில்தான் இருக்காங் களா... இன்னம் உன்னோட கூட்டிகிட்டுவந்து வச்சிக் கலையா?''

''ம்கூம்.. முடியாது... ரெண்டுவருசத்துக்கு முன்னாலேயே.. ஒருத்தருக்கு ஒருத்தர் ஆதரவாய் ஒருத்தருக்கு பின்னால ஒருத்தர்ன்னு போய் சேர்ந்துட்டாங்க.''

''ஸாரிடா... ரியலி ஸாரி'' நண்பனின் கைகளைப் பிடித்து அழுத்திக் கொண்டான்.

''இட்ஸ் ஓ.கேடா... எல்லாரும் ஒரு நாளைக்கு போக வேண்டியவங்க தானே!'' விக்னேஷ் இதயத்தைக் கீறிப்பார்த்த பெற்றோரின் நினைவுகளை மறைக்க.. செயற்கையாக சிரித் தும் வைத்தான்.

''கல்யாணம்!'' சந்தேகமாய் முகேசின் குரல் ஒலித்தது.

''பேஷாய்.. பிரம்மாண்டமாய்.. நேத்துதான் ஆச்சு.''

''டேய் மெதுவடை! இன்னும் பொய்பேசறதை விடலை யாடா?''

''இல்லடா.. நிஜம்மாதான்.''



''அப்படீங்களா.. நேத்து கல்யாணமாம்.. இன்னைக்கு தனியா ஹோட்டலா? எவனாவது காதுல பூசணிக்காய் வச் சிருப்பான் அவன்கிட்ட சொல்லு.''

''டேய்! நில்லுடா... பொய்யைக் கனவுலகூட பேசறது இல்லை.''

''திரும்பப் பொய்யா? நீ தான் மூட்டை மூட்டையா புளுகு வியேடா?''

''அதெல்லாம் ஒரு காலம்.. அதெல்லாம் சும்மா ஃபன்னுக் காகத் தான்.. சீரியஸா பொய்யை நான் நினைச்சுக்கூட பார்க் கிறது இல்லைடா.

''டேய்! இதுக்கு ஏன் நீ சீரியஸாகிற? நிஜமா கல்யாணம் ஆயிடுச்சா!''

''உம்...'' கண்களை மூடிதிறந்தான். அப்போது முகேஷ் ஆர்டர் பண்ணிய ஐட்டங்களை எல்லாம் பேரர் கொண்டு வந்து டேபிள் மேல் பரப்பினான். பேரர் நகர்ந்ததும்,

''நேத்து மேரேஜ் பண்ணிட்டு இங்கே என்னடா பண்ற?'' டோமோட்டோ சூப்பை உறிஞ்சியவன்... விழுங்கிவிட்டு...

''ப்ரஸ் மீட்'' என்றான்.

''மடையா.. வேற யாரையாவது அரேஞ்ச் பண்ணிட்டு.. நீ பொண்டாட்டியோட ஜாலியா எங்காவது டூர் போலா மில்லை... ஏன்டா.. நீ ஓர்க் பண்ற கம்பெனியில் கல்யாணம் பண்ணிக்கிட்டவனுக்கு கூடவா லீவ் தரமாட்டாங்க.''

''ஏன் மாட்டாங்க...''

''பின்ன என்ன?''

''கம்பெனியே என்னோடது.. நானே முக்கியமான ப்ரஸ் மீட்டையும், கான்ப்ரன்ஸையும் மிஸ் பண்ணலாமா?''



வாயில் வைத்த டிபனை விழுங்காமல் அதிர்ச்சியாகப் பார்த்தான்.

''ஏண்டா இப்படி மிரள மிரளப் பார்க்கிற... உண்மைதான் ராகவன் ஸாரோட பொண்ணைத்தான் நான் கல்யாணம் பண்ணி இருக்கேன்.''

''நிஜமாவா?'' நம்பமுடியாமல் கேட்டான்.

''கற்பூரம் அடிச்சி சத்தியம் பண்ணட்டா.''

''வேண்டாம்.. ஆல்வேஸ் ஐ ஃபெய்த் யூ.''

''இன்னும் ஆஃப்னவர்ல... நான் கான்ப்ரன்ஸ் ஹாலுக்கு போகணும். அதுக்குள்ளே பேசி முடி.''

''டேய்! மச்சான்.. உடம்பு முழுக்க உனக்கு மச்சம்டா... ஜாக்பாட்றா... இப்போ கோடீஸ்வரனாடா.''

''சரி.. அதைவிடு.. இந்தா இது என் விசிட்டிங் கார்ட்... ஆபீஸ்ல வந்து பாரு.''

''ஏன் வீட்டுக்கு இன்வெய்ட் பண்ணமாட்டியா?''

''வித் ப்ளஷர்.''

''சிஸ்டரை எப்போ பார்க்கலாம்?''

''வீட்டுக்கு வா.. இன்டர்டியூஸ் பண்ணி வைக்கிறேன்.''

''சிஸ்டர் எப்படி?''

''வெரி நைஸ் கேர்ள்.''

''மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குடா மச்சான். உன்னோட உழைப்புக்கும் நேர்மைக்கும் ஆண்டவன் கொடுத்த பரிசுடா இந்த வாழ்க்கை...''

''சரி... நான் கிளம்புறேன்... டயம் ஆகுது'' விக்னேஷ் எழுந்தான்.

''பாத்தியா மறந்துட்டுப் போற... உன்னோட கார்டைக் கொடுத்தியே.. என்னோடதை வாங்க மறந்திட்ட பார்'' என்றபடி கையில் இருந்த ஸ்பூனை ப்ளேட் மேலேயே வைத்துவிட்டு.. பர்சில் இருந்த தன் கார்டை எடுத்துக் கொடுத்தான்.

''ஸாரி'' என கார்டை வாங்கிப் படித்துக் கொண்டே...

''மெட்ராஸில் எத்தனை நாளைக்கு இருப்ப?''

''தெரியாதுப்பா...''

''ஏண்டா.. எதுவும் ப்ளான் இல்லையா?''

''அங்கே சந்தனக்கலர் சுடிதாரிடம் ஜொள்ளு விட்டுக் கொண்டு இருக்கிறாரே... அவரிடம் தான் கேட்கனும்.. அவர் கிளம்பினால்.. பின்னாலேயே நாலும் போகவேண்டியது தான்.''

''சரி.. கேட்டு சொல்.. போன் பண்ணு.''

''உம்''

''இரண்டு மூன்று நாட்கள் தங்கும்படியாக இருந்தால்.. ஹோட்டல்ல தங்க வேண்டாம்.. வீட்டுக்கு வா...''

''அது முடியாதுப்பா.. அவரை விட்டு நகர முடியாது.''

''ஏண்டா... அவரையும் தான் வீட்டுக்கு கூட்டிவாயேன்.. கெஸ்ட்டா தங்கட்டுமே..முகம் சுளிக்கிறமாதிரி வீடு இருக்காது.''

''டேய்.. டேய்.. நான் அப்படியா சொன்னேன்.. கோடீஸ்வரன் வீடு எப்படி இருக்கும்னு எனக்குத் தெரியாதா?''



''டைம் என்ன?''

வாட்சைப் பார்த்த முகேஷ்...

''11.10'' என்றான்.

''மை காட்... இன்னும் இருபது நிமிசம் தான் இருக்கு'' அவசரப்பட்டவனை.. இழுத்துப்பிடித்து,

''இன்னம் இருபது நிமிஷம் இருக்குள்ள... நான் சாப்பிட்டாச்சு.. பில் பே பண்ணிட்டு வறேன்.. வெய்ட்'' என்றான்.

முகேஷ் தடுக்கத் தடுக்க.. பில்லிற்கு விக்னேஷ் பே பண்ணினான்... பேரர் நகர்ந்ததும்...

''வா... கௌதமை இண்டர்டியூஸ் பண்ணி வைக்கிறேன்.''

''ம்கூம்.. வேண்டாம்.. டயம் இல்லை.''

''வாடா.. ரெண்டு நிமிஷம் தான்.''

தோளைக் குலுக்கிக் கொண்டு விருப்பம் இல்லாமல் கௌதம் அமர்ந்திருந்த டேபிள் நோக்கி முகேசுடன் நடந்தான். கௌதம் அந்த சந்தனக்கலர் சுடிதாருடன் மிகவும் சீரியஸாக... விவாதம் பண்ணிக் கொண்டிருந்தான்.

முகேஷிற்கே இடைஞ்சல் பண்ண தயக்கமாகத்தான் இருந்தது.

கட்டாயப்படுத்தி விக்னேஷை அழைத்து வந்து விட்டதால்.. வேறு வழியில்லாமல்...

''எக்ஸ்க்யூஸ்மி ஸார்'' என்றான்.

''எஸ்'' என்றபடி நிமிர்ந்த கௌதம்... முகேஷை பார்த்து விழியை உயர்த்த நினைத்து.. கூடவே விக்னேஷைப் பார்த்து ஸ்நேகமாய் சிரிக்க முயற்சித்தான். அந்த சந்தனக்கலர்





சுடிதார். இதையெல்லாம் கண்டுகொள்ளாமல். தலையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு.. முகத்தை கவிழ்த்து இருந்தாள்.

'இவர்களுக்குள் ஏதோ ப்ராப்ளம் போல் இருக்கிறது... ஒரு வேளை இந்தப் பெண்ணை நம்ப வைத்து ஏமாற்றப் பார்க்கின்றானோ... பாவம்..' மனதிற்குள் வருத்தப்பட்டான்.

''என்ன முகேஷ்... எனி ப்ராப்ளம்... யார் இவர்?'' அடுக்கடுக்காய் கௌதம் கேள்விகளை அடுக்கினான்.

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை ஸார். ஹி ஈஸ் மை பெஸ்ட் ப்ரண்ட் விக்னேஷ்... பிசினஸ் லைன்தான். இன்டர்டியூஸ் பண்ணலாம்னு கூட்டி வந்தேன்..''

''ஹலோ... ஐ'ம் கௌதம்'' என்றபடி கையை நீட்டினான்.

''ஹாய்!'' என்றபடி விக்னேசும் கையை நீட்டினான். இதையெல்லாம் அந்த சந்தனகலர் சுடிதார் லட்சியம் செய்யாமல் தலையைக் குனிந்தபடியே இருந்தது.

''இங்கே எதுக்கு... பிசினஸ் விசயமா யாரையாவது பாக்க வந்தீங்களா?''

''எஸ்.. ப்ரஸ்மீட்டும்.. கான்ஃப்ரன்சும் இருக்கு'' என்றவன்...

''எக்ஸ்க்யூஸ்மி நான் கிளம்புறேன்'' என்றான்.

''ஜஸ்ட் எ மினிட்'' என்ற கௌதம்.. நாகரீகம் கருதி.. தலையைக் கவிழ்ந்திருந்தவளின் கைகளைத் தட்டிவிட்டு...

''ஏய்.. சில்லியா பிகேவ் பண்ணி.. மூட் அவுட் பண்ணிக்காதே.. இப்போ என்ன நடந்து போச்சு.. விடு.. முகேஷ் என்



னோட பி.ஏ. விக்னேஷ் முகேசோட ப்ரண்ட்.. விஷ் பண்ணுடா'' என்று முகத்தை நிமிர்த்தினான்.

''ஸாரி! ஹலோ'' என நிமிர்ந்தாள்.

விக்னேஷின் சுவாசம் நின்றுபோனது... சிவப்பணுவும்.. வெள்ளையணுவும் இயக்கம் மறந்து ஸ்தம்பித்தது. சினிமாவில்தான் அதிர்ச்சியான சூழ்நிலையில் கடல் கொந்தளிக்கும்.. பூகம்பம் வெடித்து சிதறும்.. அப்போதெல்லாம் உள்ளுக்குள் சிரித்தவன். உண்மையில் அந்த நிலைக்கு ஆளானான். மூளைக்குள் குண்டு வைத்து தகர்த்தது போல் ஏதோ வெடித்தது... ரத்தம் சூடேறி கொதித்தது.

'மாயா' மனம் துடித்ததை நாக்கு சுழன்று சொல்ல மறுத்தது.

நிமிர்ந்து பார்த்த மாயாவின் கண்களுக்குள்ளும் இடி இறங்கி... மின்னல் மின்னிற்று.. அனிச்சையாய் எழுந்து நின்றாள்.

அழுது முடித்த சுவடு கண்களில் உள்ள ஈரம் உணர்த்திற்று.

'உன்னை எப்படியெல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இப்படி எவன் முன்னாடியோ கண் கலங்கிக் கொண்டு இருக்கியேடி கண்ணே.. நான் கையாலாகதவனா.. இல்லை நீ.. கலங்கிய நிலாவா...' மனம் என்னென்னவோ எண்ணிப் படபடத்தது...

''விஷ் பண்ணு மாயா.. சீ மிஸ்டர் யங்க் மேன்.. ஷீ ஈஸ் மாயா.. மை கேர்ள் பிரண்ட்'' கௌதம் சொல்லும்போதே கழுத்தைப் பிடிக்கலாமா என்று விக்னேஷிற்கு கை நரம்புகள் புடைத்து முறுக்கேறியது. கட்டுப்படுத்த மிகவும் சிரமப்பட்டான்.

உதட்டில் புன்னகைய ஒட்டவைத்து ஹலோ சொல்ல எச்சிலை விழுங்கினான்.

''ஹ..லோ...''

முகேஷ் சிரித்தபடி.

''ஹலோ!'' என்றான்.

விக்னேஷ் வெறுமையாய்ப் பார்த்தான்.

''ஹ..லோ...'' கௌதமின் வற்புறுத்தல் தாங்காமல் மாயா சொல்ல..

''.........'' மௌனமாய் பார்த்தான்.

''சரி.. நீ கிளம்புடா'' என்றான் முகேஷ்.

''......''

''டேய்.. என்னாச்சு.. உனக்கு டயம் ஆகல.''

''.......''

''டேய்'' உலுக்கினான்.

''ஓ.. ஸா...ரி'' தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

''அப்போ.. நாங்களும் கிளம்புறோம்.. சீ யூ மீட் அகெய்ன்.''

''.........''

மாயா தலையைக் கவிழ்த்துக் கொண்டு கௌதம் பின்னால் போவதை.. வெறிக்க வெறிக்கப் பார்த்தான் விக்னேஷ். நல்லவனாக வாழ இந்த உலகம் விடாது போல் இருக்கே... பற்கள் அறைபட்டன.



# 4

மொட்டை மாடி. இரவு 12.00 மணிக்கு மேல் இருக்கும்... நிலவு காய்ந்தது. விண்மீன் எல்லாம் சிரித்துக் கொண்டு இருந்தது. நிலவு வெளிச்சத்தில் மேகக் கூட்டம்... சத்தமில்லாமல் நகர்ந்தது கூடத் தெரிந்தது... வெள்ளைப் புகையை அள்ளிக்கொட்டியது போல்.. குவியல் குவியலாய் குட்டி குட்டி மேகங்கள். மொட்டை மாடி முழுவதும். தொட்டி தொட்டியாய் ரோஜாச் செடி பூத்துக் குலுங்க. அங்கிருந்த அத்தனை ரோஜா மொட்டுக்களும்... லேசாய் விரிசல்விட. பூ மணம் நாசியை மோதி மோதி சிதறியது. கோடைகாலமாக இருந்தாலும் இரவு மேலும் பாதியாகிவிட்டதால். காற்றில் குளிரும் சேர்ந்து கலந்து வந்து தழுவியது. இந்த சூழ்நிலை கவிஞன் ஒருவனுக்கு அமைந்து இருந்தால்.. கிட்டதட்ட ஒரு குயர்பேப்பர் முழுவதும் கவிதையாய் நிரம்பி வழிந்து இருக்கும்.

கான்ப்ரன்ஸிலும்.. ப்ரஸ்மீட்டிலும் பிணமாய்தான் அமர்ந்திருந்தான் விக்னேஷ். என்னதான் அவளுக்கு இவனைப் பிடிக்கவில்லை என்றாலும்.. இன்னும் ஒட்டாத உறவு என்றாலும்.. வேறு ஒருவன் பக்கத்தில் பார்த்ததும்.. தாங்கிக் கொள்ளமுடியாமல் சப்பாத்தி போடும் நேரத்தில் கோதுமை மாவு என்னென்ன அவஸ்த்தைக்கு உள்ளாகுமோ அந்த அளவு இதயம் நொந்து நூலானது. இப்போது மொட்டை மாடியில் உட்கார்ந்து கொண்டு புலம்ப வேறு தொடங்கி இருக்கிறது.



'கௌதமிற்கும் மாயாவிற்கும் காதல் கீதல் இருக்குமோ... அப்படி இருப்பதால்தான் என்னை ஏற்க முடியாமல் தத்தளிக்கிறாளா? அப்படி லவ் பண்ணினா... எதுக்கு இந்தக் கல்யாணத்தை நடத்த சம்மதிச்சு இருக்கணும்? நான் இப்படிப் பைத்தியக்காரனாய்ப் புலம்புவதற்கா? கௌதமிற்கு என்ன குறைச்சல்? கோடீஸ்வரன்... அழகானவன்... படித்தவன்.. கண்களை மூடிக்கொண்டு மாயாவைக் கொடுத்து இருக்கலாமே... ஒரு வேளை மாயா தன் காதலைப்பற்றி சொல்லாமல் இருந்து இருப்பாளோ... ச்சேசே... இருக்காது. மாயா தைரியமான பொண்ணாச்சே.. ஒருவேளை முகேஷ் சொன்னது போல் கௌதம் பற்றி ராகவன் கேள்விப்பட்டு இருப்பாரோ...' பலவாறு எண்ணிய படி...

தன்னை ஒரு சால்வைக்குள் இறுக்கிக் கொண்டு.. குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு.. மொட்டைமாடியின் கட்டைச் சுவற்றில் உட்கார்ந்து இருந்தான் விக்னேஷ்.... நடுநிசி ஆகிக் கொண்டிருப்பதை அவன் அறியவில்லை.

கண்கள் எரியத் துவங்கியிருந்தது.

முதல்நாள் இரவு சோபாவிலும்.. இரண்டாம் நாள் இரவு மொட்டைமாடியின் கட்டைச் சுவற்றிலும் விடியும் என்று அவன் தலையில் எழுதப்பட்டு இருந்தது போலும்...

விஷ்.. விஷ்... என சுழன்று வந்து அடித்தகாற்றை லட்சியம் செய்யவில்லை. நீயா நானா பார்ப்போம் என்பது போல் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு உட்கார்ந்து இருந்தான். மெல்லிய காலடி ஓசை அருகே கேட்டதுபோல் பட்டதுமே.. சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு உருவம் படியேறிக் கொண்டிருந்தது.

'யார்?நம்மைத் தேடியா? இல்லை.. நம்மைப்போல் ஒரு ஓரமாய் உட்கார்ந்து புலம்பவா... யாராக இருக்கும்?'



யோசித்தபடியே உட்கார்ந்து இருந்தான். அருகில் வர வர.. பெண் என்று மனதிற்குப் பட்டது. மேலும் நாலைந்து படி முன்னேற மாயா என்று தெரிந்தது.

'மாயா' என்று அறிந்ததுமே உள்ளுக்குள் ஒரு 'தடக்' அவன் அமர்ந்து இருக்கும் கட்டை அருகே வந்து நின்றாள். நைட்டிக்குள் புகுந்து கொண்ட வானத்து நிலவாய் தெரிந்தாள்.

''நீங்க ரூம்க்கு வருவீங்க வருவீங்கன்னு எதிர்பார்த்தேன்.. ரொம்ப நேரம் வெயிட் பண்ற மாதிரி தோணியது.. காலையில பார்த்துக் கொள்ளலாம் என்று படுக்கவும் தோணலை. வீடு முழுக்க தேடிப் பார்த்தேன். கடைசியா இங்கே வந்தேன்'' கொஞ்சம்கூட தயக்கம் இல்லாமல் தெளிவாகப் பேசினாள் மாயா.

'வீடு முழுக்க என்னைத்தேடி அலைந்தாயா? எதற்கு?' தனக்கு தானே கேட்டுக் கொண்டான்.

''உங்களோட பேசணும்.''

''வெல்கம்'' என்றான்.

''ஃப்ஸ்ட்.. ஐ ஸே டு ஸாரி'' என்றாள்.

நிலவு வெளிச்சத்தில் அவள் முகத்தைப் பார்த்தான். நெற்றியில் பொட்டு இல்லை. கண்களில் மை இல்லை. உதட்டில் லிப்ஸ்டிக் இல்லை. இதெல்லாம் இல்லாமலேயே நான் அழகாக இருப்பேன் என்று அவள் முகம் சொல்லாமல் சொல்லியது. காதோரம் மினு மினுத்த பூனை முடி.. குளிர் தாங்காமல் விறைத்து நின்றதை விக்னேஷ் கவனித்தான்.

''எனக்கு குளிர் பழக்கப்பட்ட ஒன்று.. ஆனால் உங்கவீட்டு சூழ்நிலை... இதில் எல்லாம் உன்னை அடிபட வைத்து இருக்

காது என்று நினைக்கின்றேன். ரூம்ல போய் பேசலாமா?'' அனுமதியை எதிர்பார்த்துக் கேட்டான்.

''ம்'' தலையாட்டிக் கொண்டே இவன் பின்னால் வருகின்றானா? என்று பார்க்கக் கூடத் தோன்றாமல் கீழே இறங்கிக் கொண்டிருந்தாள். போர்த்தி இருந்த சால்வையை உதறி விட்டு.. திரும்ப போர்த்திக்கொண்டான்.

அறைக்குள் அவர்கள் நுழையும்போது.

மணி 1.10 என்று காட்டியது கடிகாரம்... உள்ளே நுழைந்ததுமே... சுற்றியிருந்த சால்வையை உதறி சோபாவில் போட்டுவிட்டு.. சம்மணம் இட்டு அமர்ந்து கொண்டான். கட்டில் மேல் போய் அமர்ந்து இருந்தவள், இவன் சோபாவில் உட்கார்ந்ததைப் பார்த்து... இறங்கி.. சோபாவில் அவனுக்கு நாலடி இடைவெளிவிட்டு அமர்ந்து கொண்டாள்.

''என்மேல் உங்களுக்கு கோபம் வரலையா?'' ஆச்சர்யமாகக் கேட்டாள்.

''வரலை'' சாதாரணமாய்ச் சொன்னான்.

''என்னை அறையணும்னு தோணலையா?''

''தோணலை.''

''என்னைப் பார்த்தா எரிச்சலா வரலை?''

''வரலை''

''என்னிடமா உன்னோட திமிர்.. அடக்கிக்காட்றேன்னு ஆத்திரம் வரலை?''

''இல்லையே''

''என்னை ஒண்ணும் பண்ண முடியலையேங்ற இயலாமை... எங்கப்பா மேலேயே ஆசிட் ஊத்தணும்னு மனசு துடிக்கலை?''



''இல்லை''

''தாலி கட்டிய பொண்டாட்டி யாரோ ஒருத்தன் பக்கத்தில் நிக்கிறாளேன்னு.. ஆத்திரப்பட்டு கழுத்தை நெறிக்க கை பரபரக்கலை.''

''ம்கூம்.''

''பிடிக்காத பொண்டாட்டியா இருந்தாலும்.. அடுத்தவன் பக்கத்தில் பார்ப்பதை எந்த ஆம்பிளையும் விரும்பமாட்டான்.. ருத்திரதாண்டவமே ஆடுவான்... அந்த மாதிரி எந்த உணர்ச்சியும் தோணலை.''

''இல்லையேம்மா''

''அட்லீஸ்ட் இப்படிப்பட்டவளையா கல்யாணம் பண்ணிக்கிட்டோம்னு... வருத்தப்படலையா?''

''படலையே''

''மனசுக்குள்ளையாவது அழணும்னு தோணலை?''

''இல்லை''

''அப்போ எதுக்கு.. மொட்டைமாடி வாசம்?''

''எந்தக் கட்டாயத்திற்கு உட்பட்டு இந்த மாயா நம்மை திருமணம் செய்து கொண்டாள் என்று சிந்தித்துப்பார்க்க...''

அதைக் கேட்டதுமே விலுக்கென நிமிர்ந்தாள்.

அவனின் அந்த பதிலை அவள் எதிர்பார்க்கவில்லை என்று அப்பட்டமாக அவள் கண்கள் காட்டிக் கொடுத்தன. சோபாவின் ஓரத்திற்கு நகர்ந்து சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

''எங்கிட்டே என்ன பேசணும்னு தேடி அலைஞ்ச.''

''என்னோட சுதந்திரம் மற்றவர்களை பாதிக்கக்கூடாதுன்னு கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருப்பேன். அப்படி



இருந்தும் கொஞ்சம் மிஸ்ஸாயிடுச்சி... இந்தக் கல்யாணத்தில் கொஞ்சம்கூட எனக்கு விருப்பம் இல்லை. நேற்றைக்கு முதல் நாள் கூட டாடிகிட்டே போராடிப் பார்த்து தோத்துப் போயிட்டேன்.''

''...........''

''கல்யாணத்தை பற்றி எல்லாருக்கும் கனவுகளும் கற்பனைகளும் இருக்கும்... வாழ்க்கையில் நடக்கிற சம்பவங்கள் சுற்றியிருக்கும் உறவுகள் எல்லாத்திலேயும் வெற்றி தோல்வி இருக்கு... ஆனா வாழ்க்கைத் துணையில்.. நாம எதிர்பார்த்தது போல் அமையாமல்... ஏமாற்றத்தை சந்திக்கிறமாதிரி ஆகிவிட்டால்... தாங்கிக்கிறதும்... சமாளிக்கிறதும் ரொம்ப கஷ்டம்... சரியா சொல்லணும்னா.. அரேஞ்சிடு மேரேஜில் எனக்குத் துளிகூட உடன்பாடு இல்லை. நமக்கு பிடித்த தகுதிகளை உடைய ஒரு நபரைத் தேடியாவது வாழ்க்கையில் சந்திக்கணும்... ஒருத்தரை ஒருத்தர் நன்றாகப் புரிந்து பழகி.. மனசுவிட்டு பேசி விருப்பு வெறுப்பு தெரிந்து கல்யாணம் பண்ணிக்கணும்... நான் ஆசைப்பட்டது இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையைத்தான்.. முன் பின்ன தெரியாத ஒருத்தனைப் பெத்தவங்களுக்காக கல்யாணம் பண்ணிகிட்டு.. அவனுக்காக எல்லாத்தையும் விட்டுக்கொடுத்து.. வேறவழி இல்லாம அட்ஜெஸ்ட் பண்ணிகிட்டு என்னால வாழமுடியாது.. விரும்பணும்.. நான் மனசார விரும்பணும்..''

''கௌதமை லவ் பண்ணுறியா?''

''ஆமாம்.. அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு ஆசைப்பட்டேன்.''

''உங்கப்பாகிட்டே சொல்லியிருக்கலாமே.''

''சொன்னேன்.. போராட்டம் பண்ணிப்பார்த்தேன்... உண்ணாவிரதம் இருந்துபார்த்தேன்.. முடியல.. சென்டிமென்ட்டா



என்னை பிளாக்மெயில் பண்ணிட்டார். அம்மா இல்லாத குறைதெரியாம வளர்த்தவர். இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கி... பேசமுடியாமல், செயல்பட முடியாமல் செய்துவிட்டார்.''

''அம்மாவின் குறையே தெரியாமல் வளர்த்தவர்.. உனக்கு ஒரு தப்பான ஜோடியையா தேர்ந்து எடுப்பார்?''

வேதனையாகச் சிரித்தாள்.

''எனக்கு பார்த்துப் பார்த்து எல்லாமே அவர் செய்து இருக்கலாம்.. ட்ரஸ் விசயத்தில் படிப்பு விசயத்தில் தவறு நடந்து இருந்தால் திருத்திக்கலாம்.. வேற மாத்திக்கலாம்.. ஆனா இது லைப். மாத்திக்க முடியாது. என்னைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? சொல்லுங்க பார்ப்போம். நிச்சயமா என் மனசு.. ஆசை... எதிர்பார்ப்பு.. ஏக்கம் இது எதுவுமே உங்களுக்குத் தெரியாது. முதலாளியோட பொண்ணு, பணக்காரி, அழகானவ... அது மட்டும்தான் தெரியும்... அதுக்காகத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க. அப்படித்தானே?''

''..........''

''பரவாயில்லை சொல்லுங்க... என்னோட பணத்திற்காகத்தானே கல்யாணம் செஞ்சிக்கிட்டீங்க... நிஜத்தை சொல்லுங்க... ஏன்னா இனிப்பான பொய்யைவிட கசப்பான உண்மை எனக்குப் பிடிக்கும்.''

''எனக்கு பண ஆசை இல்லை அப்படின்னு சொன்னால்.. அது பொய்.. இருக்கு... பணம் பெரிசு இல்லை.. பாசந்தான் பெரிசுன்னு பேசறவன் அத்தனைபேரும்.. நாயா அலையறவன்தான்னு அர்த்தம்... உன்னை நான் கல்யாணம் பண்ணிக்க காரணம் நிறைய உண்டு.. உன்னோட தகப்பனார் என்மேல் வைத்திருந்த நம்பிக்கை... உன்னோட அழகு... கம்பெனியை

நன்றாய் பார்த்துக் கொள்ள முடியும் என்ற கடமை உணர்வு. அவ்வளவுதான்னு நினைக்கிறேன்.''

''நீங்களும் எங்கப்பவோட சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து சம்மதிச்சு இருக்கீங்க... கிட்டதட்ட நானும் அதே நிலைதான். நாம சந்தோஷமாவா இருக்கோம். இல்லையே.. ஏண்டா இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துகிட்டோம்ன்னு வேதனையோடதான் பேசிக்கிட்டு இருக்கோம்.''

''எக்ஸ்க்யூஸ்மி.. நான் வேதனைப்படலை'' என்றான்.

அலட்சியமாக அவனைப் பார்த்தாள்.

''ஸாரைப் பற்றி எனக்கு நல்லா தெரியும்... இன்னும் கொஞ்சம் நீ பைட் பண்ணி இருந்தால் கௌதமையே கல்யாணம் பண்ணியிருக்கலாமே.''

''முயற்சி பண்ணி இருப்பேன். ஆனா... அவர் ஆயுளை நாட்களாய் எண்ணிக்கொண்டு இருப்பவர். டாக்டர் அங்கிள் சொன்னது எல்லாம் எக்காரணம் கொண்டும் மாட்டேன்னு மட்டும் சொல்லி.. அவர் ஆயுளைக் குறைச்சிடாதே என்றதுதான்.''

''என்ன சொல்ற?'' பதறினான்.

''எஸ்.. நாளைக்கு காலையிலகூட அவர் நல்லபடியா எழுந்திரிப்பாரா என்பது கடவுளுக்கு மட்டும் தெரிந்த உண்மை.''

''மை காட்... இது எதுவுமே என்னிடம் அவர் சொல்லலையே.''

''சொல்ல வேண்டாம்ன்னு நினைச்சிருக்கலாம்.''

''.........'' விக்னேஷிற்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாய் விழுந்தது போல் இருந்தது. மாயா தன்னோடு பேசிக்



கொண்டு இருக்கின்றாள் என்ற சின்ன சிலிர்ப்பு உள்ளுக்குள் இருந்தது.. அதுவும் இப்போது மிஸ்ஸிங்.

''இன்னைக்கு காலையில் வரை, உங்களை தாஜ்ல பார்க்கும் வரை உங்க மேலே எந்தவிதமான அபிப்ராயமும் இல்லை. ஆனா.. அங்கே நீங்க நடந்துகிட்ட முறை.. டீசன்டான அணுகுமுறை... வெளிப்படுத்தாத பக்குவம். இதெல்லாம் என்னை ஒரு விநாடி அப்படியே தூக்கிக்கடாசிடுச்சி. உங்ககிட்டே மனம் திறந்து வெளிப்படையா பேசலாம்ன்னு தோணுச்சி.. மனசை விட்டு சொல்லணும்னா.. உங்க இடத்தில் நான் இருந்தால்.. ஓங்கி அறைஞ்சிருப்பேன்.''

''.........''

''கௌதமைத்தவிர வேறு யாரையும் என்னால் நினைத்துக் கூடப் பார்க்க இயலாது, எங்கப்பா நாளை எண்ணிக் கொண்டு இருப்பவர். அவர் உயிரோடு இருக்கும் வரை.. நிம்மதியா இருக்கணும்னு ஆசைப்படுறேன். அதுவரைக்கும் நீங்களும் நானும் ஹஸ்பென்ட் அன்ட் ஒய்ப்... வார்த்தையில்தானே தவிர வாழ்க்கையில் இல்லை'' கூறிவிட்டு அவனைப் பார்த்தாள்.

அவனும் மௌனமாய் மேலே என்பது போல் பார்த்தான்.

''சொல்லக் கஷ்டமாத்தான் இருக்கு... நெருப்புன்னா நாக்கு சுட்டுடவா போவுது? டாடி நம்மை விட்டுப் போனபின்னால்.. எனக்கு நீங்க டைவர்ஸ் கொடுத்துடணும் கௌதமோட நான் வாழணும்.''

''துணிச்சல் அதிகம்'' என்றான்.

''யாருக்கு?''



''உனக்குத்தான்.. டைவர்ஸ் கொடுடா.. நான் வேறு ஒருத்தனோட வாழணும்னு சொல்ற தைரியம் எந்தப் பெண்ணுக்கும் வராது.. எக்ஸ்செப்ட் யூ.''

''..........''

''எனி வே.. தாலிகட்டிட்டானே என்று மனசை மறைச்சி.. கட்டாயத்திற்காக.. பொய்யான வாழ்க்கை வாழவிரும்பாமல் வெளிப்படையா நான் இப்படித்தான் இதை நான் செய்யப் போறேன்னு சொல்ற பார் ஐ லைக் இட்.''

'என்ன மனிதன் இவன்... கோப தாபங்களைத் துறந்த முனிவனா.. சாதுவா... இந்த விசயத்தைக் கூற நானே சங்கடப்பட்டேன்.. இவ்வளவு ஸ்போட்டிவா எப்படி இவரால் எடுத்துக் கொள்ள முடிகிறது? ஒருவேளை நடிப்பாக இருக்குமா? அப்படித்தான் இருக்கும்.. சொத்துக்களை சுருட்ட அமைதியாய் இருக்கிறானோ...' மனம் தன் கற்பனை குதிரையைப் பறக்கவிட்டது.

''என்ன மாயா யோசனை.. இவன் மனிதன் தானான்னா?''

''அ...தெ...ல்...லாம் ம்... இல்லை.. உங்களுக்கு ஆத்திரம் வரலை.. அட்லீஸ்ட் சீ போடீன்னு கூடவா சொல்லத் தோணலை.''

''இல்லை''

''ஏன்''

''பிகாஸ் ஐ லவ் யூ.. கண்ணுக்குத் தெரியாதவங்கூட சந்தோஷப்படணும்.. சங்கடப்படக்கூடாதுன்னு சின்ன வயதில் இருந்தே நினைக்கிறவன் நான். அப்படி இருக்கும்போது நான் நேசிக்கிற ஒரு பெண்ணை என்னால திட்டவோ.. பதிலுக்கு மனசைக் கஷ்டப்படுத்தவோ முடியாது. நீ கேட்டதை



சந்தர்ப்பம் சாதகமாக இருக்கும் போது கொடுக்கிறேன். இப்போ நேரமாகுது.. படுத்துக்க.. குட் நைட்'' என்றான்.

''நீங்க'' தயக்கமாகக் கேட்டாள்.

''உம்.. படுக்கணும்...''

''பெட்டிலேயே படுக்கலாமே.''

அவளைப் பார்த்து கோணலாய் உதட்டை அசைத்து சிரித்தவன்.

''நோ தேங்ஸ்... என்னோட மாமனார் வீட்டு சோபாவே பெட்போல்தான் இருக்கிறது'' என்றபடி ஸ்விட்ச் ஆப் பண்ணினான். ஸ்விட்ச்சை மட்டும்தான் அவனால் ஆஃப் பண்ண முடிந்தது. மனம் மட்டும் ஏனோ மாயாவையே சுற்றி சுற்றி வந்தது... உன்னை எனக்குப் பிடிக்கவில்லை என்று பிடிவாதமாய் அவள் கூறியும் ஏனோ உள்ளம் அவளையே நினைத்து உருகியது.

இரண்டு நாள்கள் உருண்டது...

அவசர அவசரமாக கம்பெனிக்கு கிளம்பிக் கொண்டிருந்தான் விக்னேஷ்...

''விக்னேஷ்'' மாயா அவசரமாக அழைத்தாள்.

''என்னம்மா'' என்றபடி டையை சரி செய்து கொண்டிருந்தான்...

''என்னோட செல்... கிரடிட் கார்ட்.''

''ஓ.. ஸாரி.. உங்கப்பா நேற்றே சொன்னார்.. என்னோட ஆபீஸ் டேபிளில்தான் இருக்கிறது. ஆபீஸ் பாயிடம் கொடுத்தனுப்பட்டா.''

''வேண்டாம்! நான் அந்த வழியாத்தான் வருவேன்... வந்து வாங்கிக்கிறேன்.''

"ஓ.கே.... உன் இஷ்டம்" ஷூவை சரி செய்து கொண்டு நடக்காமல் வெளியே ஓடினான்.

விக்னேஷின் அலுவலக அறை.

விக்னேஷிற்கு எதிரே முகேஷ் அமர்ந்து இருந்தான். அவன் கைகளில் டேபிள் மேல் வைக்கப்பட்டு இருந்த மாயா வின் புகைப்படம்.

"இதான் உன் மனைவியா?"

"உம்" தலையாட்டினான்.

"நினைச்சேன்டா.. ஒரு பணக்காரன் ஏழையை மாப்பிள்ளை யாக்கிறான்னா... பொண்ணு சரியானதா இருக்காது. அதுவும் கௌதமோட கேர்ள் பிரண்ட் நிச்சயம் உன் மாயா நல்ல பொண்ணா இருக்க வாய்ப்பே இல்லை... எச்சில் பழம்டா" என்று முகேஷ் முடிக்கும் முன்பே...

"யூ ராஸ்கல்" என்று கத்திக் கொண்டே முகேஷின் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்தான்.

## 5

விக்னேஷ் சட்டையைப் பிடித்த வேகம்.. இறுக்கம்... முகேஷை மூச்சுத் திணறவே வைத்து இருந்தது.

"டேய்.. விட்றா சட்டையை.. விட்றா" என்றபடி விக்னே ஷின் கைகளை எடுக்க முயற்சித்து.. கடைசியில் பிடுங்கி எறிந்தான்.



"என்னடா ஆச்சி? உனக்கென்ன பைத்தியமா?" கத்தினான் முகேஷ்.

"ஷிட்" தலையைப் பிடித்துக் கொண்டு தொப்பென சேரில் சரிந்தவன்.. தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு.. பின் எழுந்து முகேஷ் அருகில் வந்து அவன் சட்டையில்.. காலரில் இருந்த சுருக்கங்களை தன் கையால் நீவிவிட்டான்.

"ஸாரிடா... வெரி ஸாரி..."

"........."

"என்னிடம் உனக்கு எல்லா உரிமையும் இருக்கு.. ஆனா.. மாயாவைப் பத்திப் பேச உனக்கு எந்த உரிமையும் இல்லை."

"விக்னேஷ் நீயா கோபப்பட்ற... அதுவும் என்னிடமா? என்னடா ஆச்சி? நீ போய் பணத்துக்காக இப்படி மாட்டிக் கிட்டியேன்ற வேதனையில சொன்னேன்டா..."

"நே.. நோ... யூ ஆர் ராங்க்.. பணம் ப்ளடி பணம் அதுக் காக நான் கல்யாணம் பண்ணிக்கலை. அவளை எனக்குப் பிடிச்சிருந்தது."

"பட்... நோ யூஸ்.. ஒரு தப்பான முடிச்சை கடவுள் உன் வாழ்க்கையில் போட்டுட்டார்... கௌதம் கண்ணில்பட்ட எந்தப் பொண்ணும் தப்பிச்சதா சரித்திரம் இல்லை. அதுவும்.. கல்யாணம் ஆன மறுநாள்.. இப்படிப்பட்ட ஒருத்தனோட ஹோட்டல்ல உட்கார்ந்து இருக்கான்னா... ஷீ ஈஸ் அப் நார்மல் கேரக்டர்.. யூ நோ."

"நோ.. நோ.. முகேஷ்.. மாயா நீ நினைக்கிற மாதிரியான பொண்ணு இல்ல... ரொம்ப நல்ல பொண்ணு.. கௌதமை அவ காதலிச்சிருக்கா.. இன்னமும் காதலிக்கிறா? கட்டா யத்துனால என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கா... கௌதம் கூட வந்து பேசி இருக்கான்னா.. அவனை லவ் பண்றா...





மனசில இருக்கிற துக்கத்தைக் கொட்ட அவனைத்தானே தேடிவரணும்! காதல்ங்றது என்ன? ஆத்மார்த்தமான நம்பிக்கைதானே...? அந்த நம்பிக்கையில அவனை வரச் சொல்லி புலம்பி இருக்கா.. மத்தபடி கௌதம் மற்ற பொண் ணுங்ககிட்ட ஆட்டின வால்தனம் மாயாகிட்டே நிச்சயம் நடக்காது."

"கௌதமோட குணம்பத்தி...என்னிடமே சொல்றியா?" ஒரு ஐந்து நிமிடம் அவனைப் பார்த்து இருப்பியா? அதுக்குள்ளே அவன் மேல் அவ்வளவு நம்பிக்கையா?"

"நத்திங்.. மாயாமேலே எனக்குள்ள நம்பிக்கை."

"இங்கே பார்டா... திரும்பவும் என் கழுத்தை நீ பிடித் தாலும் சரி... உன் முதலாளி.. அதான் உன் மாமனார்.. உனக்கு துரோகம் பண்ணிட்டார். ஒரு தப்பான பொண்ணை உன் தலையில கட்டிட்டார்."

"ஷல் யூ ப்ளீஸ் சட்டப்.. மாயா அப்படிப்பட்டவளும் இல்லை. நீ நினைக்கிறமாதிரியே வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும், ஒரு விளம்பரம் அவர் கொடுத்து இருந்தால்.. பாதி மெட்ராஸ் அவங்க வீட்டுக்கு முன்னால க்யூவா மாறியிருக்கும்.. அப்படி இருக்கும்போது பணமோ.. அந் தஸ்தோ... அவங்களுக்கு ஈடாக எதுவுமே எங்கிட்ட இல்லாத போது.. என்னை ஏன் மாப்பிள்ளையாக்கி இருக்கணும்?" புருவம் உயர்த்தினான்.

"டேய்! இந்தக் கேள்வியை கல்யாணத்திற்கு முன்பே உன்னை நீயே கேட்டு இருக்க வேண்டிய கேள்வி.. பட்.. லேட்டா எங்கிட்டே கேட்கிறே.. அதனால் என்ன...! நானே சொல்றேன். அவர் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு ஒரு பெரிய தகுதி இருக்கு."



"என்னடா அது.. எனக்குத் தெரியாம எங்கிட்டே இருக்கிற தகுதி?"

"இளிச்சவாயன்" என்றான் சற்று கோபத்தோடு.

செல்லையும்.. கிரடிட்கார்டையும் எடுத்துக் கொள்ள வந்த மாயா.. தன் பெயர் உள்ளே அடிபட்டதை கேட்டு.. தெரிந்து கொள்ள விரும்பி.. ஐந்து சென்டி மீட்டர் இடை வெளியில் கதவைத் திறந்தபடியே மாயா ஒன்றுவிடாமல் கேட்டாள்.

வந்த விசயம் அத்தனையும் தண்ணீர் போட்ட கோலம் போல், என்னவென்றே தெரியாத அளவுக்கு மறைந்து மறந்துபோனது. சத்தம் இல்லாமல் தள்ளியிருந்த இடை வெளியை சாத்திவிட்டு.. சிறிது நேரம் அப்படியே நின்றாள்.

கௌதம் பற்றி இருவரும் பேசியதை அவள் நம்பப் போவதில்லை. இருந்தாலும் தன்னைப் பற்றி விக்னேஷ் சொன்னது தான் பிரமிப்பாக இருந்தது. யோசனையோடு வெளியே வந்து.. தன் காரை உசுப்பியதுவரை... யோசிப் பாகவே ஆனால் மிகச் சரியாகச் செய்தாள்.

கிட்டதட்ட சண்டை போடுபவர்கள் போல் பேசிவிட்டு வெளியே வந்த முகேஷ். கொஞ்சம் நிதானித்து. கம்பெனி ஸ்டாப் ஒருவரிடம் 'எம்.டி.ராகவன் அறை எங்கே இருக் கிறது?' என்று விசாரித்துவிட்டு,

அப்பாயின்ட்மெண்ட் வாங்காமல் அவரைப் பார்க்க முடி யாது என்று கூறியும், கேளாமல் விடாப்பிடியாய் எம்.டி. அறையின் கதவைத் தட்டினான்.

முதல் தட்டிற்கு உள்ளே இருந்து எந்த பதிலும் வரவில்லை. அடுத்தமுறை.. கொஞ்சம் பலமாகத் தட்டினான்.

"எஸ்.. கமின்" குரல் வெளியே வந்து விழுந்தது.

கதவை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான். இவனைப் பார்த்ததும் ராகவன் நெற்றியில் கோடுகளும்.. புருவங்களுக்கு இடையில் முடிச்சும் விழுந்தது. பார்வையில் யார்? என்ற கேள்வி தெரிந்தது. அவர் வாய்திறந்து கேட்பதற்கு முன்பே இவன் முந்திக் கொண்டான்.

''ஐ'ம் முகேஷ்... விக்னேஷ்'ஸ் ப்ரண்ட்'' என்றான்.

''ஓ.. ப்ளீஸ் சீட்டட்'' சந்தோசத்தோடு.. முன்னே இருந்த இருக்கையை காட்டினார்.

''தேங்க் யூ ஸார்'' அமர்ந்தான்.

''உங்களை இதற்கு முன்பு பார்த்தது இல்லையே.''

''ஆமாம் ஸார்''

''மேரேஜ்க்கு கூட நீங்க வரலையோ?''

''ஆமாம் ஸார்...''

''உங்களைப் பார்த்ததில் எனக்கு ரொம்ப சந்தோசம்.. நான் ஏதாவது உங்களுக்கு...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை ஸார்.. நீங்க விக்னேஷிற்கு பண்ணியதே போதும்'' அவன் குரல் சற்று வித்தியாசமாய் இருப்பதை அவரால் உணரமுடிந்தது.

''ஏன் ஸார்.. ஒருத்தனுக்கு எந்த உறவும் இல்லைன்னா. கேட்க ஆள் இல்லைன்னா. அவனோட எதிர்காலத்தை பற்றி யோசிக்காமல், நமக்கு சாதகமாக பயன்படுத்திக்கிறதா?''

''என்னப்பா சொல்ற?'' அவருக்கு குழப்பம் அதிகரித்தது.

''நீங்க விக்னேஷிற்கு பண்ணின துரோகத்தை தான் சொல்றேன்.''



எதுவும் பேசத்தோன்றாமல் விக்கித்துப் பார்த்தார்.

''ஏன் ஸார்... உங்களோட பணத்திற்கும் செல்வாக்கிற்கும் எத்தனையோ பேர்.. அதான் பணக்கார வர்க்கத்தில்... பொண்ணோட தகுதியைப் பற்றி யோசிக்காமல்... பணத்திற்காக கல்யாணம் பண்ணிகிறவங்க.. எக்கச்சக்கமா இருப்பாங்களே.. அவங்கள்ல ஒருத்தர் கூடவா உங்களுக்கு கிடைக்கலை.''

''என்ன பேசுறோம்.. யார்கிட்டே பேசுறோம்னு தெரிஞ்சி தானே பேசுற'' ஆத்திரப்பட்டார்.

''நல்லாவேதான், தெரிஞ்சேதான் பேசுறேன்.. ஆண்டவனையும் விட உங்களை அவன் அதிகம் நம்புறான். அந்த நம்பிக்கைக்கு நீங்க பண்ணின பச்ச துரோகம். கோடிக்கணக்கான சொத்துக்கு அவனை நீங்க வாரிசாக்கி இருக்கலாம். ஆனால் ஒரு மூன்றாம்தரப் பெண்ணை அவன் தலையில் கட்டிட்டீங்களே.''

''யூ.. ப்ளடி...'' வேகமாய் நாற்காலியை விட்டு எழுந்தார்.

''ஆத்திரப்படாதீங்க ஸார்.. உங்களுக்கு உங்க பணமும், பெண்ணும் பெரிசா இருக்கலாம். ஆனால் எனக்கு என் நண்பனோட வாழ்க்கை.. நிம்மதியான வாழ்க்கை பெரிசு.''

''..........'' ராகவனின் பற்கள் அறைபட்டன.

''உங்கபொண்ணு வேற ஒருத்தனைக் காதலிக்கும் போது... எதுக்காக சார் அந்தப் பொண்ணை இவன் தலையில் கட்டுனீங்க?''

''உங்க பொண்ணும் ஒரு பணக்காரனைத் தானே காதலிச்சிருக்கா.. பின்ன என்ன?''

'இதெல்லாம் எப்படி இவனுக்கு தெரியும்.. மாப்பிள்ளையிடம் சொல்லியிருப்பானா? கௌதம் என்ற ஒருவனை



தான் காதலிப்பதாக..' மாயா பிடிவாதமாய் நின்றது.. போராடியது எல்லாம் நினைவுக்கு வந்தது.

தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு...

''இங்கே பாரு தம்பி.. என் பொண்ணு காதலிச்சி இருக்கலாம்... அது இந்தக் காலத்துல மிகவும் சகஜமான ஒன்று... ஆனா அவளோட வாழ்க்கையை நான் சரிபார்த்து கொடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்குண்டு.''

''இருக்கலாம் ஸார்... அதுக்காக...''

''என் பொண்ணு வேற ஒருத்தனைக் காதலிச்சவள் அதானேப்பா உன் குற்றச்சாட்டு.''

''இல்ல ஸார்.. அதை நான் தப்புன்னு சொல்லலை... காதலிக்கிறதும்.. சந்தர்ப்ப சூழ்நிலையால் வேற ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கிறதும் இன்னைக்கு சர்வ சாதாரணம்.''

''பிறகு என்ன?''

''கட்டிகிட்ட பின்னால.. புருஷனுக்கு உண்மையானவளா இருக்கணும்.. நடந்துக்கணும் இல்லையா?''

''எஸ்.. டெஃபனட்டா.''

''பட்.. உங்க பொண்ணு அப்படி இல்லை.''

''என்ன சொல்ற?'' கேட்கும்போதே நெஞ்சுக்குள் நெருஞ்சி குத்தியது.

''உங்க பொண்ணை காதலிச்ச கௌதம்.. என்னோட பாஸ். பொண்ணுங்க விசயத்தில் வடிகட்டின அயோக்கியன். கல்யாணத்துக்கு முன்னால அவங்களோட உறவு எந்தளவு நெருக்கமானதுன்னு தெரியாது. ஆனா.. மேரேஜ் ஆன அடுத்த நாள் காலையிலேயே அவனோட ஹோட்டல்ல பேசிகிட்டு இருந்தா என்ன அர்த்தம்?''



''மன்னிக்கச் சொல்லி கேட்டு இருக்கலாம் இல்லையா?''

''அதெல்லாம் நல்ல பொண்ணுங்க செய்றவேலை.. நேற்று காலையில தாஜ்ல விக்னேஷை பார்த்தேன். என் பாஸிற்கு இன்ட்ரடியூஸ் பண்ணிவைக்க, நாலைந்து டேபிள் தள்ளி தன் கேர்ள் ஃப்ரண்டோட சாப்பிட்டுக்கிட்டிருந்தவரிடம் கூட்டிகிட்டு போனேன். அங்கே இருந்த பொண்ணு யாருமில்லை.. உங்க பொண்ணு, விக்னேஷோட மனைவி.. கட்டின புருஷன் முன்னாடி வேற ஒருத்தன் தொட்டுப்பேசி.. அறிமுகப்படுத்தி வைக்கிறான் அதை ஏற்றுக் கொண்டு.. யாருண்ணே தெரியாதமாதிரி நடந்துகிறது நல்ல பொண்ணுக்கு அடையாளம்னு நினைக்கிறீங்களா?

''...........'' ஒரு நெருஞ்சி குத்திய உள்ளத்தில் பல்லாயிரம் நெருஞ்சிகள் குத்தின.

''இந்த மடையனும் தன்னை யாருன்னு காட்டிக்காம வந்துட்டான். எனக்கு அப்போ எல்லாம் தெரியாது. அந்த மாயாதான் இந்த மாயான்னு.. இப்போ கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான், அவன் டேபிள்ள இருந்த போட்டோவைப் பார்த்துத் தெரிஞ்சிகிட்டேன். வேற ஒருத்தனோட தன் மனைவியைப் பார்த்தபோது... அவன் மனசுக்குள்ளே எந்தளவு புழுங்கியிருப்பான்னு யோசிச்சிப் பார்க்கவே முடியலை.''

''.........'' வலியின் வேதனை பன்மடங்கு அதிகரிக்கத் தொடங்க.. பொறுத்துக் கொண்டு வலது கையால் பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டு.. இடது கையால் தன் நெஞ்சுப்பகுதியை நீவிவிட்டுக் கொண்டார்.

''அந்தப் பைத்தியக்காரன்.. இப்பவும் உங்களைத் தெய்வமாத் தான் மதிக்கிறான்... உங்க பொண்ணு நடந்துகிட்ட முறைக்கு எப்படி நியாயம் கற்பிக்கலாம்னுதான் யோசிக்கிறான்.''

''..........'' கண்ணீர் பெருகத் துவங்கியது.

''இங்கே பாருங்க ஸார்... ஒருத்தருக்கு நல்லது பண்ண ணுங்ற அவசியம் இல்லை. ஆனா.. கெடுதல் பண்ணாம இருக்கிறது ரொம்ப புண்ணியம்.. நம்ம சுதந்திரமே நம்ம கையை நீட்ற தூரம் வரைக்கும் தான் ஸார். அதுவே பக்கத்தில் வேற யாராவது இருந்து.. அவர் முகத்தில் நம்ம கைபட்டால்... முதுகு வீங்கும். ஆனா நீங்க, உங்க மேலே ஒருத்தன் வச்சிருக்க நம்பிக்கையைப் பயன்படுத்தி.. அவன் வாழ்க்கை உள்ளேயே கையை நீட்டிட்டீங்களே ஸார்...''

''........'' ப்ரஷர் கிடுகிடுவென ஏறி.. மூச்சுத்தடுமாறத் தொடங்கியது.

''முடிஞ்சா.. உங்க பொண்ணுக்கு அட்வைஸ் பண்ணுங்க ஸார்.. கற்புங்ற ஒன்று உங்க பொண்ணுக்கு இருந்தால்.. இனிமேல் அதைக் காத்துக்கணும்னா.. கௌதம்மேலே பட்ட காற்றுகூட அவங்க மேலே படக்கூடாது.''

''............''

''இதெல்லாம் உங்களுக்காகவோ.. உங்க பொண்ணுக்காகவோ நான் சொல்லலை. என் ஃப்ரண்டோட வாழ்க்கை நல்லா இருக்க.. என்னால ஏதாவது செய்ய முடியாதாங்கற ஆதங்கம் தான்.''

''......''

''பேசுங்க ஸார்'' என்றான்.

''வி...க்...னே...''

''கவலைப்படாதீங்க ஸார்.. அவன் இந்த விசயத்தை எப்படியெல்லாம் உங்களுக்குத் தெரியாமப் பார்த்துக்கணுமோ.. அந்தளவு முன்ஜாக்கிரதையா இருப்பான். ஏன்னா.. நீங்க



வருத்தப்படக் கூடாதுங்றது அவன் லட்சியம். இப்படிப்பட்டவனுக்கு.. எந்த விதத்திலேயும் பொருத்தம் இல்லாத உங்க பொண்ணைக் கொடுத்துட்டீங்களே ஸார்...''

''..........''

''நீங்களும் இதெல்லாம் தெரிஞ்சதாக அவனிடம் காட்டிக் கொள்ள வேண்டாம்.. வருத்தப்படுவான்'' என்றபடி எழுந்தவன்.

''வரேன் ஸார்'' என்றபோது தான் கவனித்தான்.

ஏ.ஸி.யையும் மீறி.. ராகவ்ன் முகத்தில் வேர்வை மழை பெய்திருந்தது. கைகளில் நடுக்கம். விழிகள் ஜீவன் இழந்து இருந்தது. இடதுகை நெஞ்சைப் பிடித்து இருந்தது.

''எனி ப்ராப்ளம் ஸார்'' என்றான் லேசான அதிர்ச்சியோடு.

''நோ... நோ.. ஒண்ணுமில்லைப்பா.. நீயும் இதெல்லாம் எனக்குத் தெரியும்னு மாப்பிள்ளைகிட்ட... சொ..ல்...ல.. வேண்டாம்.''

''..........'' அவர் குரலில் இருந்த தடுமாற்றம்.. தயக்கம்.. முகேஷிற்கு சங்கடத்தைக் கொடுத்தது. இவர் நல்லவர் தானோ... வார்த்தைகளை யோசித்துப் பேசி இருக்கலாமோ? காலம் கடந்து யோசித்தான்.

''தம்பி.. உ..ங்..க... பே...ர்?''

''முகேஷ்'' என்றான்.

''ஆங்.. முகேஷ்..என்னை மன்னிச்சிக்கப்பா.. புழு, பூச்சி.. செடியை அரிச்சிடக்கூடாதுன்னு மருந்தடிக்கிறது வழக்கம். சில நேரம் அடிக்கிற மருந்தினாலே செடி வாடிப் போயிடறதும்.. செத்துப்போயிடறதும் உண்டு. உங்க ஃப்ரண்ட் நிலை



கூட அது மாதிரிதான். உங்க ஃப்ரண்டு சந்தோஷத்தைவிட.. என் மாப்பிள்ளை சந்தோஷம் எனக்கு முக்கியம்.. நானே இதற்கு ஒரு நல்ல வழி பண்றேன்.''

''ஸார்.. உங்க மனசைப் புண்படுத்தி இருந்தால்...''

''இல்லப்பா.. உன் நிலையில் நான் இருந்தாலும்.. இப்படித்தான் நடந்து இருப்பேன்'' உள்ளம் வேதனைப்பட்டதை காட்டிக்கொள்ளாமல் வார்த்தைகளை விழுங்கி விழுங்கிப் பேசினார்.

''வரேன் ஸார்.''

''உம்...'' தலையாட்டினார்.

அவன் அறையைவிட்டு வெளியேறியதும்.. இன்னும் வலி அதிகரித்ததும்... பழுக்க காய்ச்சிய இரும்புக் கம்பி ஒன்றை இதயத்திற்குள் விட்டுவிட்டு யாரோ சொருகியது போல் இருந்தது. சத்தம் வெளியே கேட்கும் அளவு மூச்சுத் திணறத் தொடங்கியது. தட்டுத்தடுமாறி வக்கீலின் நம்பரை நினைவுக்கு கொண்டுவந்து. பட்டனை அழுத்தி தன் நிலையை விளக்கமுடியாமல் விளக்கி.. வரச்சொன்னார்.

லாயர் மனோஜ்குமார்.

அவரின் அறைக்கு வந்தபோது.. பாதி உயிர் காற்றில் கரைந்து இருந்தது... டாக்டருக்கு போன் பண்ணி வரவழைக்க மனோஜ் முயற்சிக்கும்போது தடுத்தார். மனோஜ் கேட்காமல் டாக்டருக்கு போன் செய்துவிட்டுத்தான் அவர் அருகில் வந்தார்.

அலுவலகத்தில் உள்ளவர்களை அழைக்க மனோஜ் எத்தனித்த போது...

''வே...ண்...டா...ம்.. ப்ளீஸ் மனோஜ்'' என்றார்.



அடுத்த அரைமணி நேரத்தில் அவர் நினைத்த அனைத்தும் உயிலாக மாறிக் கொண்டு இருந்தது...

''இ..னி..மே.. எல்லாமே.... நீ.. தாம்பா.. பார்த்...துக்கணும்.''

''கண்டிப்பா ராகவன்.''

அதிகமாக மூச்சு திணறினார்.

''ராகவன்...'' ராகவனை தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

''ம..னோ...ஜ்.. நீ தான்.. மா...யா..வை.''

''ப்ளீஸ்.. எமோஷனல் ஆகாதீங்க.. இப்போ.. இப்போ.. டாக்டர் வந்திடுவார். எதுக்கும் ஹாஸ்பிடல் ஆம்புலன்சுக்கு போன் பண்ணிடறேன்'' என்றபடி மெதுவாய் ராகவனை சோபாவில் படுக்க வைத்துவிட்டு... ஆம்புலன்ஸ் வரச்சொல்லி போன் செய்து விட்டு மனோஜ் சோபாவிற்கு அருகில் வந்த போது...

எழமுடியாத நீண்ட நித்திரைக்குப் போயிருந்தார் ராகவன்.

அவர் நாசியில் கைவைத்துப் பார்த்தவர், நெஞ்சில் காது வைத்து கேட்டு.. சட்டப்புத்தகம் சுமந்த கையில் நாடிபிடித்துப் பார்த்தார். துடிப்பு அடங்கிப் போய் இருந்தது.

ராகவனின் இறப்பு யாருமே எதிர்பார்க்காத ஒன்றாக இருந்தாலும்.. விக்னேஷ் அதிர்ச்சியின் உச்சத்தில் ஆடிப் போயிருந்தான். அது பத்தாது என்று கம்பெனி எக்ஸ்க்யூட்டிவில் இருந்து ப்யூன் வரை எந்த நேரத்தில் இவன் மாப்பிள்ளையாக அவர் வீட்டில் காலடி எடுத்துவைத்தானோ... ஆளே இல்லாமல் பண்ணிட்டான் என்று காதுபடவே பேசினார்கள்.

கொஞ்சம்கூட கம்பெனி விசயத்தில் தலையிடமுடியாமல்.. கவனிக்க முடியாமல் தடுமாறினான். மாயா எந்த நிமிடமும்

இந்த சம்பவத்தை எதிர்பார்த்து இருந்தாலும்.. தந்தையின் இறப்பைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் தவித்தாள்.

## 6

மரணம் இந்த மண்ணில் ஜனித்த அனைவருக்குமே நிச்சயமான ஒன்றுதான். ஆனால் அது ஏற்படுத்தும் தாக்கம் அப்பப்பா.. மாயாவுக்கு சின்ன வயதினில் தகப்பனின் கரம் பிடித்து கடற்கரையோரம் துள்ளலாய் நடந்தது முதற்கொண்டு.. வயதுக்கு வந்ததை தந்தையிடம் நேரிடையாக சொல்ல சங்கடப்பட்டு தன் தோழி மூலம் தெரிவித்து.. 'மாயா குட்டி இப்ப பெரிய பெண்ணாயிட்டீங்களா' என்று சந்தோஷித்து செல்லமாய் சீண்டி... அவ்விஷயத்தை விமரிசையான விழாவாக்கி ஆனந்தப்பட்ட தகப்பனை.. தாயில்லாத குறையின்றி கேட்டதை நிறைவேற்றியவரிடம் கௌதம் மீதான காதலுக்காக மல்லுக்கட்டி நின்றதும்.. அவருடைய பிடிவாதத்துக்காவே விக்னேஷுக்கு தான் கழுத்தை நீட்டியதும்.. ஒவ்வொன்றாய் நினைவுக்குள் அலை அலையாய்.. அத்தனை வயதிலும் ஒரு கம்பீரமாய்.. துடிப்பாய் இருந்த அப்பா...

மாயா சிறு வயதாய் இருக்கும்போது அம்மா இறந்து போனாள். அப்போது தெரியவில்லை மரணத்தின் தாக்கம். இப்போது புரிகிறது...

விக்னேஷின் நிலை வேறு. கம்பெனி... கம்பெனி என்று எந்நேரமும் அதே நினைப்பாய் உழைத்தவனை பெரிதும் மதித்தவர் ராகவன்.



திடீரென ஒரு நாள். 'எம் பொண்ணை நீ பாத்துருக்கயில்ல. உனக்குப் பிடிக்கும்ன்னு நம்புறேன். பேசாம நீ என் மாப்பிள்ளையாயிடேன்' என்று கல்யாணத்தைக் கூட கம்பீரக் குரலில் பேசி முடித்தவர்.

'செல்லமா வளர்த்த பொண்ணு கொஞ்சம் அப்படி இப்படி நடந்துக்கிட்டா கூட நீதான் அவளை அன்பால் மாத்தணும். நீ ரொம்ப மென்மையானவன், உன்னால அது முடியும் எனக்குத் தெரியும்!' என்று நெகிழ்வாய் அவர் கூறியதன் அர்த்தம் அப்போது புரியவில்லை. கல்யாணத்துக்கு பின் கௌதமோடு அவளை சேர்த்துப் பார்த்தபோது தான் புரிந்தது.

அந்த நல்லவரின் மனசு புண்பட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காகவே அவனுக்கும் மாயாவிற்கும் இடையில் நடந்த சம்பவம் அனைத்தையும் மறைத்தான்.

இப்படி திடீரென ஹார்ட் அட்டாக் வருமளவிற்கு என்ன நிகழ்ந்தது? ஒரு வேளை முகேஷ் அவரைப் பார்த்திருப்பானோ? ச்சீ.. சீ.. அப்படியெல்லாம் செய்யும் அளவிற்கு முகேஷிற்கு தைரியம் கிடையாது என்று அந்த எண்ணத்தை விட்டொழித்தான்.

அப்படி இப்படியென மூன்று மாதங்கள் நகர்ந்தன. மாயாவும் ஒருவாறு தேறியிருந்தாள். வீட்டிலேயே அடைந்திருந்தால் அப்பாவின் நினைவுகளும் வளைய வளைய வரத்தானே செய்யும்?

அன்றைய சாயங்கால வேளையில் வெளியே கிளம்ப எத்தனித்தாள். வாசலுக்கு சென்று செருப்பை அணிந்தவளை விக்னேஷின் குரல் தடுத்து நிறுத்தியது.

''அடேடே நீங்க எப்ப வந்தீங்க விக்னேஷ்?''

''நான் வந்து அரைமணி நேரமாச்சு மாயா.''



''என்ன இவ்வளவு சீக்கிரமா...?''

''உனக்காகத்தான் மாயா.''

குழப்பத்தை கண்களில் தேக்கியவளை உள்ளே அழைத்து கூடத்திலிருந்த சோபாவில் அமரச் சொல்லி தானும் அமர்ந்தான்.

அவர்கள் அமர்ந்த கணநேரத்திலும் லாயர் மனோஜ்குமாரும் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும் மாயா ஆச்சர்யத்தையும் திகைப்பையும் கண்களில் காட்டினாள்.

''என்ன அங்கிள் திடீர்ன்னு..'' என்றவளை வியப்பாய் பார்த்தார் மனோஜ்குமார்.

''என்னை போன் பண்ணி வரச் சொன்னதே விக்னேஷ் தான்... என்ன விக்னேஷ் எனி பிராப்ளம்.''

''நத்திங் ஸார்... ஆனா நான் மாயாகிட்ட கொடுத்த வாக்குறுதிப்படி நடந்துக்கணுமே. அதுக்காகத்தான் உங்களை வரவழைச்சேன்!''

''நீங்க சொல்றது எனக்குப் புரியலை விக்னேஷ்.''

விக்னேஷ் சற்று தயங்கியபடி வார்த்தைகளை உதிர்த்தான்.

''எங்களுக்கு டைவர்ஸ் வேணும் ஸார்.''

எந்தவித அதிர்ச்சியையும் காட்டாமல் மனோஜ்குமார் மென்மையாக சிரித்தது, விக்னேஷிற்கு சற்றே ஏமாற்றத்தை தந்தது. மாயா எந்தவித சலனமும் காட்டாமல் அமர்ந்திருந்தாள். ஆனால் மனசுக்குள் விக்னேஷ் உயர்ந்து கொண்டிருந்தான்.

'என்ன மனிதன் இவன், தாலி கட்டிய நாள் முதல் என் மேல் நகம் கூடப் படாமல் பண்போடு பழகிய விதமென்ன...? நண்ப



னொருவன் என்னைத் தவறாய் பேசியதற்காக ஆவேசமாய் கண்டித்த பரிவென்ன...? தந்தை இறந்தவுடன் விவாகரத்து விவகாரத்தில் அடியெடுத்து வைத்தால், பிறர் பார்வையில் மிக தவறாய் படுமோ என்றெண்ணி மூன்றுமாதம் கழித்து நான் கேட்டதை கொடுக்க விழையும் பரந்த மனசென்ன..? இதுநாள் வரை தாலி கட்டியதற்கான உரிமையை எந்த விதமான அதிகாரத்திலும் செலுத்தாதவன் முதன் முறையாக விவாகரத்தில் செலுத்துவது அவலம் தான்' மாயா விக்னேஷைப் பரிவாய் பார்த்தாள்.

மனோஜ்குமார் புன்னகை மாறாமல் தன் பேச்சைத் துவங்கினார்.

''விக்னேஷ், நீ கேட்ட டைவர்ஸ் என்னைக் கொஞ்சம் கூட அதிர்ச்சியாக்கலை. காரணம் மாயாவோட அப்பா... ஐ மீன் என்னோட ஃபிரண்டு ராகவன், உங்களுக்குள்ளே என்ன பிரச்சனை இருக்கும்.. இருந்திருக்கணும்கிறதை எல்லாம் என்கிட்டே அடிக்கடி டிஸ்கஸ் பண்ணுவார். நான் இறந்த பிறகு இப்படியெல்லாம் நடக்கலாம்ன்னு ஒரு லிஸ்ட்டே போட்டும் வைச்சிருந்தாரு. அதுல ரொம்ப முக்கியமானது இப்ப நீங்க கேட்ட டைவர்ஸும் ஒண்ணு.''

விக்னேஷும், மாயாவும் அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர். 'இத்தனை கணக்கியலும், தெளிவும் கொண்ட மனிதர் தன் சொந்த மகளைப் பற்றி.. மாயாவின் துணிச்சலைப் பற்றி ஏன் தெரிந்து கொள்ளாமல் போனார்? அவர் செய்த தவறு இந்தத் திருமணம்தான். இது இல்லையெனில் எந்தப் பிரச்சனைக்கும் இடமே இல்லையே' என்று எண்ணம் அலைக்கழித்தது இருவருக்குமே.

''அப்படி அவர் எல்லாத்தையுமே முன்கூட்டியே கணிச்சிருந்தா எந்தப் பிரச்சினையுமே இருந்திருக்காதே.''

என்று பொதுவாய் விக்னேஷ் சொன்னாலும் அதில் ஏக அர்த்தங்கள் புதைந்திருந்தன.

''அங்கிள், அப்பா... அவர் காலத்தில் என்ன வேணும்ன் னாலும் செய்திருக்கலாம். ஆனா எங்களுக்கு வேண்டியது டைவர்ஸ்! அதுக்கு அப்ளை பண்ணுங்க அங்கிள்.''

முதன்முறையாய் மாயா பேசினாள்.

''அது முடியாதும்மா மாயா. உங்கப்பா அதுக்கும் ஒரு முட்டுக் கட்டை போட்டு வைச்சிருக்காரு.''

''எப்படி?'' என்று அவரை இடைமறித்தான் விக்னேஷ்.

''சொத்து வேணாமா?!''

''எனக்கேன் ஸார் சொத்து? நான் இடையிலே எதுமில்லாம வந்தவன்.. மறுபடியும் எதுவுமில்லாம போறேன். இதுல எனக்கென்ன இழப்பு?''

''உனக்கு எந்தப் பிரச்சனையுமே இல்ல. ஆனா மாயா...! இந்த சொத்தெல்லாம் மாயாவுக்கும் உனக்கும்.. ஞாபகம் வைச்சுக்க.. உனக்குப் பிறக்க போற குழந்தைக்குத்தான் சொந் தம். இல்லைன்னா மாயாவுக்கு சொத்து கிடையாது. குழந்தை பிறக்கிற வரை விக்னேஷ் சொத்துக்கு கார்டியன். இது சாகிற துக்கு முன்னாடி என்னைக் கூப்பிட்டு எழுதச் சொன்ன உயில். அவர் சொன்ன நிபந்தனைப்படி நடக்கலைன்னா சொத்து அனாதை ஆசிரமங்களுக்குத்தான்!'' என்று கூறி புன்னகைப் பாய் இருவரையுமே பார்த்தார்.

விக்னேஷ்.. தன் மேல் ராகவன் அழுத்தமாய் வைத்திருந்த நம்பிக்கையைக் கண்டு மலைத்துப் போனான். மாயாவைப் பார்க்க விக்னேஷிற்கு பரிதாபமாய் இருந்தது.

ஆனால் மாயா அலட்சியம் காட்டினாள். உள்ளுக்குள் அதிர்ச்சியாய் இருந்தாலும் அதை வெளிகாட்டிக் கொள்ளா மல் சிரித்தாள்.



''இங்கேதான் டாடி தப்பு கணக்கு போட்டுட்டாரு. யாருக்கு வேணும் இந்த சொத்து. என்னோட கௌதமுக்கே ஏகமா சொத்து இருக்கு. அவர் விரும்பினது என்னைத்தானே தவிர இந்த சொத்தை இல்லை...''

''இங்கேதாம்மா நீ தப்பு பண்றே! கௌதம் கோடீஸ்வரியா இருக்கும் போது காதலிக்கலாம். ஆனா ஒண்ணும் இல்லாத வளை கல்யாணம் பண்ணிக்க கௌதம் முட்டாளில்லை.''

''ஜஸ்ட் எ மினிட் அங்கிள்.''

என்று ஆவேசமாய் சொன்னவள் அருகே இருந்த ஃபோனைக் கையாண்டாள். கௌதமின் பெங்களூர் அலுவலகத்துக்கு தொடர்பு கொண்டாள்.

''ஹலோ கௌதம் ஹியர்.''

''ஹலோ நான் மாயா பேசறேன்.''

''என்ன மாயா டார்லிங் இந்த நேரத்தில் எனி பிராப்ளம்...''

''ஆமாம் கௌதம் சின்ன பிரச்சனை. நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா டாடியோட சொத்து கிடைக்கா தாம். அப்படி ஒரு உயில் எழுதிவைச்சிருக்காரு...''

எதிர்முனையில் துல்லியமாய் அதிர்வது மாயாவுக்கே புரிந்தது. சில வினாடிகள் கௌதம் பேசாமலிருக்க.. மாயா துடித்துப் போனாள்.

''கௌதம்.. கௌதம் நான் சொன்னது அதிர்ச்சியா இருக்கா?''

''ஏய்.. ஏய்.. ஏன் ஸில்லியா திங்க் பண்றே நான் மாயாவைத் தான் லவ் பண்றேன்... சொத்தை இல்லையே?''

''கௌதம் ஐ லவ் யூ டூ மச்யா'' என்று மாயா துள்ளிக் குதித்தாள். குதிக்கையில் சட்டென மாயாவுக்கு கண்கள் இருட்டிற்று. மயங்கி விழுந்தாள்.





விக்னேஷ் பதறினான். அவளைப் பூப்போல் அள்ளி சோபா வில் படுக்க வைத்தான். 'அலோ... அலோ'வென கதறிக் கொண்டிருந்த ரிசீவரை எடுத்து கௌதமுக்கு விஷயத்தை சொல்லி போனை வைத்தான்.

மனோஜ்குமாரிடம் டைவர்ஸுக்கு அப்ளை செய்யா விடில் தான் வேறு வக்கீலைப் பார்க்க நேரிடும் என வற்புறுத்தி சொல்லி, அவர் உதவியோடு மாயாவைக் காரில் கிடத்தி மருத் துவமனை விரைந்தான்.

# 7



எத்தனை நேரம் தான் மயக்கமுற்று கிடந்தோம் என்ற உணர்வற்று கிடந்தாள். 'உவ்வே' என்ற சத்தத்தில்தான் அவளே முழித்துக் கொண்டாள். அப்படி சட்டென அரைகுறை யாய் எழுந்தும் எழாமலும் வாந்தியெடுத்த போதும் தன் கழுத்துப் பகுதியோ நெஞ்சுப் பகுதியே ஈரமாகாததை மாயா அப்போதுதான் கவனித்தாள்.

விக்னேஷ் அவள் எடுத்த வாந்தியெல்லாம் கைகளைப் பாத்திரமாக்கிப் பிடித்திருந்தான். மாயா, வாந்தி உணர்வைக் கட்டுப்படுத்த முயற்சித்தாள்.

''பரவாயில்லை மாயா, வாமிட் வந்தா முழுசா எடுத்துடச் சொல்லுங்கன்னு டாக்டர் சொல்லியிருக்காரு. கண்ட்ரோல் பண்ணாதே மாயா.''



என்று சொல்லவும் சட்டென கட்டுப்பாடு இழந்து அடி வயிற்றிலிருந்து பீறிட வாந்தி எடுத்தாள்.

''என்ன மாயா வாட் எ ஸில்லி பிகேவ். அதான் நினைவு வந்திடுச்சில்ல. எழுந்து போயி வாஷ் பேசின்ல வாமிட் பண் ணினா என்ன?அந்தளவுக்கு கூடவா உடம்புல திராணி இல் லாம போச்சு.''

என்று முகச்சுளிப்பாய் வார்த்தைகளை உதிர்த்த கௌதமை அப்போதுதான் கவனித்தாள் மாயா. சட்டென மலர்ந்த முகம் சுருங்கிற்று.

''இல்ல கௌதம் என்னால... என்னால...'' என்று தடு மாறினாள்.

''ரிலாக்ஸ் மாயா... கௌதம் சார் மாயா உடம்புல புட் பாய்ஸன் தங்கியிருக்கு. நேத்து புல்லா ட்ரிப்ஸ் தான் ஏத்தி யிருக்காங்க. எழுந்து நடமாடக் கூட உடம்பில சக்தியிருக் காதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரு. அதனால இந்த விஷ யத்தைப் பெரிசு பண்ண வேண்டாம் ஸார்.''

என்றதும் கௌதம் தன் முகச்சுளிப்பை சற்றே தணித்தான். விக்னேஷ் வாஷ் பேசினுக்குள் கைகளைக் கழுவ ஆரம்பித் தான்.

''மாயாவுக்கு ட்ரீட் பண்ண டாக்டர் யாரு விக்னேஷ்.''

''டாக்டர் அபிஷேக்.''

மாயாவின் பக்கம் திரும்பிய கௌதம், ''போன் பேசிக் கிட்டு இருக்கும் போதே நீ மயக்கம் போட்டு விழுந்துட் டேன்னு விக்னேஷ் போன்ல சொன்ன போது எவ்வளவு துடிச்சுப் போயிட்டேன் தெரியுமா? அதனாலதான் உடனே ப்ளைட் பிடிச்சு வந்தேன். நான் போயி டாக்டர் அபிஷேக்கைப் பார்த்துட்டு பர்சனலா உன் ஹெல்த்தைப் பத்தி விசாரிச்சுட்டு வந்திடறேன். அப்பத்தான் என் மனசு ஆறும்.''

என்று எழுந்தவனை மாயா காதலுடன் பார்த்தாள். விக்னேஷ் கூட அவன் வார்த்தைகளில் சற்று தடுமாறித்தான் போனான்.

'அடடா எத்தனை காதல் இவனுக்கு! என்னைவிட எல்லா விதத்திலும் இவன் தான் மாயாவுக்குப் பொருத்தம்' என்ற உள்ளுக்குள் சிலாகித்துக் கொண்டான். கௌதம் வெளியே செல்லவும்...

''சரி மாயா நானும் டாக்டர் சொன்ன டேப்லெட்ஸை எல்லாம் வாங்கிட்டு வந்துடறேன்.''

என்று விக்னேஷும் கிளம்ப, மாயா களைப்பாய் கண் மூடினாள்.

மருந்துகளை வாங்கி மருத்துவமனை முகப்பைக் கடந்து மாயா இருக்கும் வார்டுக்கு நடந்தான் விக்னேஷ். கர்ப்பவதிகளுக்கான டாக்டர் மகாலஷ்மி அறையைக் கடக்க முயலும் போது.. உள்ளேயிருந்து வெளிப்பட்ட கௌதமின் குரல் விக்னேஷின் கால்களைக் கட்டிப்போட்டது.

''ரொம்ப தேங்க்ஸ் மகாலஷ்மி. நீ இந்த ஆஸ்பிட்டல டாக்டரா இருப்பேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. நீ இருந்தது எனக்கு வசதியாப் போச்சு. டைவர்ஸ் ஆகப் போற பொண்ணை போனாப் போகுதுன்னு கட்டிக்கிட்டு வாழ்க்கை கொடுக்கப் போற புண்ணியவான் நான். இதுல வேற மயக்கம் அது, இதுன்னு சொல்லி பீதியைக் கிளப்பிட்டானுங்க. கர்ப்பமோன்னு நினைச்சு பதறிட்டேன். இங்க வந்து பார்த்தா அது இல்லன்னு தெரிஞ்சுது. ஆனா மனசு மட்டும் சமாதானம் ஆக மாட்டேங்குது. மாயா வெர்ஜின்தான்... கன்னிப் பொண்ணுதான்னு நீ சர்ட்டிபிகேட் கொடுத்தாத்தான் எனக்கு நிம்மதியே வரும் மகா.''



''கௌதம் நான் உன் சொந்தக்காரி. அது மட்டுமில்லாம என் ஆன்ட்டி குடும்பத்தில் தப்பான பொண்ணு மருமகளா போயிடக்கூடாதுங்கிற காரணத்தினால, இந்த விஷயத்துக்கு நான் சம்மதிக்கிறேன். ஆனா இந்த விஷயம் யாருக்கும் தெரியாம பாத்துக்க.. முக்கியமா அந்தப் பொண்ணுக்கு!''

''அதை நான் பாத்துக்கிறேன் மகா.''

அவர்கள் பேசியதைக் கேட்ட விக்னேஷ் மனசுக்குள் பொடிப் பொடியாய் நொறுங்கினான். மளமளவென அங்கிருந்து நகர்ந்தான்.

உள்ளே நுழைந்த விக்னேஷின் முகம் வெளிறிப் போயிருப்பதை கவனித்த மாயா,

''விக்னேஷ் ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க.''

''ஒண்ணுமில்ல மாயா'' என்றபடி தன் முகத்தை இயல்புக்கு கொண்டு வந்தபோது, கௌதம் உள்ளே நுழைந்தான்.

''இப்போ எப்படியிருக்கு மாயா'' என்றபடி அவளருகில் அமர்ந்தான்.

''இப்ப பரவாயில்லை கௌதம்'' என்று மாயா சொன்ன சமயம்.. கதவைத் தட்டிக் கொண்டு ஒரு நர்ஸ் உள்ளே நுழையவும்... மூன்றுபேரும் ஒரு சேர அவள் மேல் பார்வையைப் பதித்தார்கள்.

''மேடம்! டெஸ்ட்டுக்கு நேரமாச்சி.''

''டெஸ்ட்டா?'' கௌதம், விக்னேஷ் இருவரையும் புரியாமல் பார்த்தாள்.

''செக்கப் இருப்பதாக டாக்டர் மகாலஷ்மி சொல்லச் சொன்னாங்க.''



''செக்கப்பா. டாக்டர் மகாலஷ்மியா?'' விக்னேசும் கேட்டான்.

''என்னை டாக்டர் அபிஷேக் இல்ல...'' மாயா முடிக்கும் முன்னரே... கௌதம் சுதாரித்துக் கொண்டு...

''மாயா.. டாக்டர் மகாலஷ்மி எனக்குத் தெரிஞ்சவங்க... இனி மேலும் உனக்கு எதுவும் ஆகிவிடக்கூடாதுல்ல.. தரோவா செக்கப் பண்ணச் சொன்னதே நான்தான்'' என்றான்.

''எனக்கு ஒண்ணுமில்லை கௌதம்.''

''அதை டாக்டர் சொல்லட்டுமே.''

''வேண்டாம் கௌதம்.''

''ப்ளீஸ்ம்மா.. எனக்காக.. என் திருப்திக்காக'' கௌதம் குரலைக் கெஞ்சுவது போல் மாற்றிக் கொள்ள...

''சரி...'' என்றாள்.. எல்லா செக்கப்பும் முடிந்து...

டிஸ்சார்ஜ் ஆகி.. அன்றே வீடுவந்தும் சேர்ந்தாள். கௌதமும் ஏகப்பட்ட வேலை இருப்பதாகவும். அடிக்கடி போன் செய்வதாக கூறி, ஈவ்னிங் ப்ளைட்டிற்கே பெங்களூர் பறந்துவிட்டான். நாள் நிமிடமாய்.. மணியாய் மாறி ஓட.. இரண்டு வாரங்களை ஈஸியாய் முழுங்கி இருக்க.. எப்போதும் போல மாயா சிட்டுக்குருவியாய் சிறகடிக்கத் தொடங்கியிருந்தாள்.

## 8

அன்று திங்கள்கிழமை. வழக்கமாய் வாரத்தில் முதல் வேலை நாளான திங்கள் அன்று மட்டும் விக்னேஷ் காலை



8.00 மணிக்கே கம்பெனிக்கு கிளம்பி விடுவது வழக்கம். அன்று பத்துமணிக்கு மேலாகியும்.. வீட்டிலேயே உள்ள ஆபீஸ் ரூமில் உள்ள போனோடு போராடிக் கொண்டிருந்தான்.

'ஷிட்' 'ஷிட்' என அடிக்கடி தலையில் கைவைத்துக் கொண்டான்.

''லயனே கிடைக்கமாட்டேங்குதே'' வாய்விட்டுப் புலம்பினான். 'இன்னும் ஒரு ஐந்துநிமிடம் கழித்துப் பண்ணலாமா?' யோசித்தவன் ரிசீவரை அதன் இடத்திலேயே பொருத்திவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். இடுப்புப்பகுதியில் வேர்வையின் ஈரம் கசகசத்தது. இன்பண்ணி இருந்த ப்ரவுனும்.. மஞ்சளும் கலந்த டீசர்டை உருவி மேலேவிட்டான். அதே நேரம் வெளியே கிளம்பி வந்த மாயா.. ஆபீஸ் ரூம் கதவு திறந்து இருந்ததால், நெற்றியைச் சுருக்கிக் கொண்டே.. உள்ளே எட்டிப்பார்த்தாள். விக்னேஷைப் பார்த்ததுமே... ஆச்சர்யக்குறி முகத்தில் விழுந்தது.

''ஆபீஸ் போகலை?'' கேட்டாள்.

குரல் கேட்டதுமே.. விழியை உயர்த்தினான். அதிசயமாய் சேலையில் இருந்தாள் மாயா. கருப்பும் சாம்பலும் கலந்த உயர்ரக காட்டன்புடவை, முழங்கைக்கு கீழே வரையும் தன் சுதந்திரத்தைக் காட்டிய ஜாக்கெட், கழுத்தில் கருப்புநிற ஸ்படிகமாலை, நெற்றியில் கருப்பு ஸ்டிக்கர், கையில்கூட கருப்புநிற பேங்கிள்ஸ்... அவளின் எலுமிச்சை நிறத்திற்கு... அத்தனைக் கருப்பும்.. கண்ணுக்குள் அடங்காத அழகான ஓவியமாக்கிக் காட்டியது...

கண்கள் ரசித்ததை மனது கண்டித்தது. வரம்பு மீறாதே உதைபடுவாய் என்று...

''ஹலோ... சார்.. இங்கே தான் இருக்கிறீர்களா...? ஆபீஸ் போகலையா?''

''போகணும்.''

''இன்னைக்கு மண்டே ஆயிற்றே.. சீக்கிரம் போயிடுவிங் களே.. அதான் கேட்டேன்.''

''போன் ஒன்று ட்ரை பண்றேன் கிடைக்கலை'' என்றான்.

''நம்பர் சொல்லுங்க.. நான் வேணா ட்ரை பண்றேன்'' என்றபடி.. கதவை நன்றாய் திறந்துவிட்டு.. உள்ளே வந்தாள்.

''நோ... தேங்ஸ்'' என்றான் அவசரமாய்.

''பரவாயில்லை கொடுங்க'' என்றாள் பிடிவாதமாய்.

''இல்லை இல்லை.. நானே பார்த்துகிறேன். என்ன மாயா அவுட்டிங்கா.. மேக்கப்ப பார்த்தா தெரியுது.''

''எஸ்'' தலையாட்டிவிட்டு திரும்பினாள்.

''மாயா! ஜஸ்ட் எ மினிட்.''

நின்று திரும்பிப் பார்த்து என்ன விக்னேஷ் என்பதுபோல் தலையாட்டினாள்.

''மார்டன் ட்ரஸைவிட.. சேலை உனக்கு நன்றாய் இருக்கு'' என்றான்.

''உம்..'' அத்தனை பற்களும் தெரிய சிரித்தாள்.

இவள் மட்டும் அவனுக்கு சொந்தமானவளாக மட்டும் இருந்தால்.. சிரித்த அவள் சிரிப்பை அப்படியே அள்ளி பாக்கெட்டில் செருகி பத்திரப்படுத்தி இருப்பான்.

''தேங்ஸ்'' என்றாள். வாசல்வரை வந்தவளை வேலைக் கார சின்ன பெண் தடுத்து நிறுத்தினாள்.

''அக்கா!''

''என்ன''

''பால் குடிச்சிட்டுப் போங்க.''



''வேண்டாம்.''

''குடிச்சிட்டு போங்கக்கா'' பால்கிளாஸோடு நின்றாள்.

''வேண்டான்னா விடவாபோறே கொண்டா'' என்றபடி சோபாவில் வந்து அமர்ந்து கொண்டாள். டீபாய் மேல் இருந்த போன் மனஓட்டத்தை சஞ்சலப்படுத்தியது...

''துர்காவிற்கு போன் பண்ணிட்டுப் போலாமே!'' யோசனை தோன்றியது. ரிசீவரைக் கையில் எடுத்தபோது.. முகத்திற்கு நேராய் பால் நீட்டப்பட்டது. டீபாய் மேலேயே வைக்கும்படி கண்ணாலும் கையாலும் ஜாடை காட்டினாள்.

வேலைக்கார சிறுமியும் ஆமோதித்தபடி டீபாய் மேலேயே பால் டம்ளரை வைத்து விட்டு நகர்ந்தாள். ரிசீவரைக் காது களுக்கு கொண்டு சென்று... பட்டனை அழுத்த நினைத்த போது... ரிங் போய் கொண்டிருந்தது. விக்னேஷ் போன் பண்றாரா...? லயன் கிடைத்து விட்டது போலிருக்கே... பேசி முடித்து வைக்கட்டும்.. என்று எண்ணி அந்த இண்டர்காம் போனை வைக்க எத்தனித்த போது...

போன் எடுக்கப்படும் சத்தம் கேட்டு...

''மிஸ்டர்.. கௌதம் ப்ளீஸ்'' என்ற விக்னேஷின் குரல் கேட்டது. கௌதமிற்கு விக்னேஷ் போனா...? மாயா முகம் மாற்றமடைந்தது. கேட்கலாமா? வைக்கலாமா? என்று முடிவு எடுக்கும் முன்னரே...

''எஸ்.. கௌதம் ஸ்பீக்கிங்'' என்ற எதிர்முனை குரலும் கேட்டது. உடனே இயற்கையாய் உள்ள ஆர்வத்தின் பொருட்டு... இரும்பை கவ்விக் கொண்ட காந்தமாய்.. காதோடு ரிசீவரை பொருத்திக் கொண்டு.. இருவரின் பேச்சையும் கேட்கத் தொடங்கினாள்.

''நான் விக்னேஷ்.''

''விக்னேஷ்!'' கௌதம் குரலில் ஆச்சர்யம் தெரிந்தது.

''ஏன் நான் பேசுவேன்னு எதிர்பார்க்கலையா?''



''எஸ்.. நீங்க போன் பண்ணுவீங்கன்னு எதிர்பார்க்கலை.''

''எதிர்பார்க்கறது எதுவுமே நடக்கிறது இல்லையே மிஸ்டர் கௌதம்'' மறுமுனையில் பலமாக சிரித்தான் கௌதம்.

''எதிர்பார்க்காதது நடக்கும் போதுதான்.. லைப்ல ஒரு இன்ட்ரஸ்ட்டே இருக்கும்.''

''அப்போ நீங்க எதிர்பார்த்த மாதிரி மாயாவோட ரிசல்ட் வரலை இல்லையா?'' விக்னேஷ் குரல் சூடேறி இருந்தது.

''என்ன ரிசல்ட்?'' கௌதம் குரலில் கேள்விக் குறியும் கலந்து ஒலித்தது.

''டாக்டர் மகாலஷ்மி எதுவும் சொல்லலையா?''

''டாக்டர். மகாலஷ்மியா?''

''மிஸ்டர். கௌதம் நீங்க பண்ணியது எனக்கு அன்னைக்கே... மாயா எந்த செக்கப்பிற்கு போறான்னு.. அதற்கு முன்னமே எனக்கு தெரியும்.''

''விக்னேஷ்.''

''சொல்லுங்க.. அந்த டாக்டரம்மா என்ன சொன்னாங்க?''

''..........'' எதிர்முனை மௌனம் சாதித்தது.

''மாயா இன்னும் வெர்ஜின்தான்னு சர்டிபிகேட் கொடுத்து இருப்பாங்களே!''

அதைக்கேட்டதுமே மாயாவின் மண்டைக்குள் இருந்த மூளை நரம்புகளும் ஸ்தம்பிக்க... மூளை வெடித்து வெளியே சிதறாத குறை தான். அன்று கடைசியாய் டிஸ்சார்ஜ் ஆவதற்கு முன் தனக்கு நடந்த செக்கப் வெர்ஜின் டெஸ்ட்டா...?

அப்போதுதான் நினைவிற்கு வந்தது. 'மயக்கம் மாதிரி இருக்கும் பயப்படாதீங்க' என்று தனக்கு இன்ஜெக்ஷன் போடப்பட்டது.

''என்ன மிஸ்டர் கௌதம்... எதுவும் பேசமாட்டேங் கீங்க?'' விக்னேஷ் மீண்டும் கேட்டான்.



''இந்த விசயம்...'' கௌதம் குரலில் லிட்டர் கணக்கில் தயக்கம் வழிந்தது.

''மாயாகிட்டே சொல்லணும்னு தான் மனசு துடிச்சது. செக் கப்பிற்கு புறப்படும் போதும்கூட இழுத்து பிடிச்சி விஷயத்தை சொல்லத்தான் ஆசைப்பட்டேன். ஆனா, முடியலை.. அதற்கு ரெண்டு காரணம் உண்டு. ஒண்ணு மாயாவோட மனசைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும்... எந்த ஒரு பெண்ணுமே.. சகித்துக் கொள்ள முடியாத விஷயம் இது.. மாயாவுக்கோ, பிடிவாத மும் தன்மான உணர்ச்சியும் அதிகம்.. அவளால இதைத் தாங் கிக் கொள்ள முடியாது. ரெண்டாவது சந்தேகம் வந்திட்டா அதை உடனே நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.. வளர விடக்கூடாது.. நாளை, நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழப்போறவங்க.. உங்களுக்கோ... இல்லை மாயாவுக்கோ சந்தேகம் வந்திட்டால்.. வாழ்க்கை நன்றாய் இருக்காது.''

''தேங்ஸ் பார் யுவர் அட்வைஸ்'' தான் செய்த காரியம் தெரியக்கூடாத ஒரு நபருக்கு தெரிந்துவிட்டதை கௌதமால் ஜீரணிக்க முடியவில்லை. அவனுடைய இயலாமை கோபமாய் வார்த்தையில் வெளிப்பட்டது.

''கோபப்படாதீங்க ஸார். முதல்ல சந்தேகமே உங்களுக்கு வரக் கூடாது. அதுவும் காதலிச்சவ மேலே.. கல்யாணம் பண்ணிக்கிறவ மேலே.. அதுவும் அவ கற்பைப் பற்றி சந்தேகப் படலாமா... இட்ஸ் வெரி வெரி பேட்.''

''..........''

''இப்பவாவது சந்தேகம் தீர்ந்து.. ப்ரியா இருப்பீங்கன்னு நினைக்கிறேன். ஆம் ஐ கரெக்ட்?''

''உம்''

''ஒரு விஷயம் சொல்லட்டுமா?''

''போன் பண்ணி அட்வைஸ் பண்றதுன்னு முடிவு பண்ணி யாச்சு... சொல்லுங்க'' சிரித்தான் விக்னேஷ். பிறகு...

''உங்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கிறதா மாயா ஸ்டிரைக் பண்ணினபோது.. ராகவன் ஸார் உங்களைப் பற்றி விசாரித்து இருக்கார். அவர் கேள்விப்பட்ட எல்லாமே... அவருக்குப் பிடிக்கலை! உங்களைப்பற்றி மாயாகிட்டே சொல்லி இருக்கார். சொன்ன அத்தனையும் உண்மையும் கூட.. ஆனா, மாயா நம்பலையே.. அந்தப் பொண்ணு நம்பமாட்டா... அதுக்கு காரணம், உங்க மேலே அவளுக்குள்ள காதல்.. காதல் என்ற பெயரில் உங்க மேலே வச்சிருக்க நம்பிக்கை.. விசுவாசம்.. அந்த நம்பிக்கையும், விசுவாசமும் நீங்க மாயாமேலே வைக்கணும்.''

''அப்புறம்'' கேலியாய் கேட்டான்.

''எனக்கும் மாயாவுக்கும் டைவர்ஸ் கிடைக்க இன்னும் ஒரு வருஷம் ஆகும். அப்போ திரும்ப அவளுக்கு இந்த டெஸ்ட் வச்சிடாதீங்க. தாலிகட்டிட்டா என்ன... காதலிச்சவன்தான் தன்னோட கணவன்னு தைரியமா இன்னைக்கு வரை எல்லாத்தையும் ஃபேஸ் பண்ற.. அந்த நேர்மையான மனசு.. என்னைக்கும் கற்போடதான் இருக்கும். எத்தனை வருடம் ஆனாலும்.. நானும் மாயாவும் ஒரே ரூமில் இருந்தாலும் நீங்க நினைக்கிற அந்த தப்புமட்டும் நடக்காது. அந்தளவு நாங்க ரெண்டு பேருமே தரங்கெட்டவங்க இல்லை.''

''விக்னேஷ்!'' குரலை உயர்த்தினான்.

''நீங்க கோபப்படறதினால், நீங்க பண்ணினது நியாயம் ஆகிடாது. ஒருத்தரை நாம சந்தேகப்படறோம்னா... அந்தத் தகுதி நமக்கிருக்கான்னு யோசிக்கணும். உங்க வாழ்க்கையில எத்தனை பொண்ணுங்க... வயசு வித்தியாசம் கூட இல்லாமல் எத்தனை காதல் களியாட்டம். அதையெல்லாம் உங்க கல்யாணத்திற்கு பிறகேனும் நிறுத்திவிட்டு மாயாவுக்கு உண்மையா நடந்துக்குங்க.''

''லுக்.. மிஸ்டர்.. ஓவரா பேசறீங்க.. நீ சொல்ற மாதிரி நான் ப்ளே பாய்தான். பொறுக்கிதான். அதுவும் பொம்பளை



பொறுக்கிதான். மாயாவை ஒண்ணும் தொரத்தி தொரத்தி நான் லவ் பண்ணலை. அவதான் என் பின்னாடி வந்தா. இன்னைக்கு நான் கோடீஸ்வரன்.. பெங்களூரில் விரல்விட்டு எண்ணக் கூடிய மில்லியனர்ல நானும் ஒருத்தன். எனக்கு பொண்ணு கொடுக்க அவனவன் க்யூவில் நிக்கிறான். அப்படி இருக்கும் போது கல்யாணம் ஆன ஒரு பொண்ணை, அதுவும் உயில்படி எந்த சொத்தும் இல்லாத பெண்ணை.. கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சதே... என்னோட பெருந்தன்மை.. அவமேலே எனக்குள்ளே எழுந்த ஒரு பரிதாப உணர்ச்சி ஓ.கே.''

விக்னேஷிற்கு அவன் கோபத்தை பார்த்து அதிர்ச்சியாய் போனது. ஏதாவது ஏடாகூடமாக மாறிவிடுமோ என்று பயந்தான்.

''ஸாரி... ஸாரி ஸார்... மனசு கேட்கலை அதான் போன் பண்ணிட்டேன். மாயாவை நீங்க சந்தேகப்பட்டதை என்னால் டால்ரேட் பண்ணிக்கமுடியலை. அதான்.''

''.......''

''ப்ளீஸ் மனதில் எதுவும் வச்சிக்காதீங்க... மாயா மேல் தூசு கூட படாமல் பத்திரமாய் பாதுகாத்து உங்களிடம் ஒப்படைக்க வேண்டியது என்னோட கடமை...''

''ஓ.கே.. ஓ.கே... இதைப்பற்றி.''

''மாயாவிடம் மூச்சுக்கூட விடமாட்டேன்.''

''மாயா எப்படி இருக்கா?''

''ஷீ ஈஸ் பைன்.''

''ஓ.கே...'' என்றபடி போனை கட் பண்ணினான் கௌதம். விக்னேசும் இந்தப் பக்கம் போனை வைத்தபிறகும், காதிலேயே வைத்திருந்தாள் மாயா. கொஞ்ச நாட்களுக்கு முன்பு பூமியை நோக்கி வந்த அத்தனை விண் எரி கற்களும் ஒன்றாய் அவள் தலையில் வந்து விழுந்து.. உடல் முழுக்க பற்றிக் கொண்டு எரிந்தது. மெள்ள போனை அதன் இடத்தில் வைத்தாள்.



அலுவலக அறையை சாத்திவிட்டு.. கம்பெனிக்கு கிளம்ப... உள்ளே நுழைந்த விக்னேஷ்... சோபாவில் சிலையாய் உட்கார்ந்து இருந்த மாயாவை வியப்போடு பார்த்தான். அவனுக்கே தெரியாமல்... புரிந்து கொள்ள முடியாமல்... அவளைப் பார்க்கும்போது உள்ளுக்குள் உயிர் உருகி... சஞ்சலப்பட்டது.

## 9

கிட்டத்தட்ட ஆறுமாதங்கள்... எவருக்கும் இடையில் சஞ்சலமோ, சங்கடமோ... சபலமோ ஏற்படாமல் மிக அமைதியாய் நகர்ந்தது. உற்று கவனித்தால் மாயாவின் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கவனிக்க முடியும். ஆனால் அதற்கெல்லாம் நேரம் இல்லாமல் கம்பெனி கம்பெனி என்று அலைந்துக் கொண்டிருந்தான் விக்னேஷ்.

மாயாவாக கௌதமிற்கு போன் செய்வதை நிறுத்திக் கொண்டாள். அவன் பேசினால் எப்போதும் போல் பேசத் தவறுவது இல்லை.

இரண்டொரு முறை வக்கீல் மனோஜ் விக்னேஷை சந்தித்த போது.. மாயாவின் சந்தோஷம் மட்டுமே தனக்கு சந்தோஷம்... அதனால் கேஸ் நடக்கட்டும் என்று நழுவத் தொடங்கினான். மாயாவைப் பார்த்தபோது எந்தவிதமான கருத்தையும் கூறாமல்.. சிரிக்கமட்டுமே செய்தான்.

அன்று ஞாயிற்றுகிழமை.

லேட்டாக எழுந்து, லேட்டாகப் பல்தேய்த்து, லேட்டாய் குளித்து... லேட்டாய் சாப்பிட்டு.. சின்ன சின்னதாய் கட்டம்



போட்ட பச்சை கலர் கைலியுடனும்... க்ரே கலர் டீ-சர்ட்டுடனும் டி.வி. முன்பு அமர்ந்திருந்தான். அடிக்கடி தலைமுடியைக் கைகள் கோதிக் கொண்டு இருந்தன.

''விக்னேஷ்!'' என்றாள்.

''ம்'' டி.வி.திரையில் இருந்து பார்வையை எடுக்காமலேயே உம் கொட்டினான்.

''சீரியலை கொஞ்ச நேரம் கழித்துப் பார்க்கலாமா... உங்களுக்கு பிரச்சனை இல்லன்னா?''

''என்ன மாயா'' சொல்லி கொண்டே ரிமோட் மூலம் டி.வி.யை அணைத்தான்.

''பாஸ்போர்ட்டுக்கு அப்ளை பண்ணனும்'' தயக்கமாகக் கூறினாள்.

''பாஸ்போர்ட்டா... இப்பவா?''

''ம்'' தலையாட்டினாள்.

''எதுக்கு பாஸ்போர்ட்.. டூரா?''

''ம்கூம்.''

''ஓ.. ஹனிமூனுக்கா.. கௌதம் ஏதாவது பிக்ஸ் பண்ணி இருக்காரா? ஸ்விச்சர்லான்ட்.. லண்டன்?'' குனிந்திருந்த அவள் முகத்தை அவனும் குனிந்து கொண்டு கேட்டான்.

''இல்லை''

''பின்ன எதுக்குன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?''

''படிக்கப்போறேன்.''

''படிக்கவா?'' ஆச்சர்யம் பன்மடங்காக உயர்ந்தது.

''எம்.பி.ஏ. பண்ணப்போறேன். ஸ்டேட்ஸ்ல சீட் கிடைச்சிருக்கு.'' என்றபடி கையில் இருந்த வெளிநாட்டுக் கவர் ஒன்றை அவனிடம் நீட்டினாள்.

வாங்கிக் கொண்டவன். உள்ளே இருந்த சீட்டை உருவிப் பார்த்தான். அட்மிஷன் கார்ட்.

''இப்போ எதுக்கு...? அதுவும் எம்.பி.ஏ?''

''எம்.பி.ஏ. பண்ணிட்டு கம்பெனியை கவனிக்க.''

''ம்... வெரிகுட்... கல்யாணம் ஆகக்காட்டியும்... கௌதமோட கம்பெனிபற்றி கவலை வந்துடுச்சா.''

''இல்லை... என் அப்பாவோட கம்பெனியைப் பார்த்துக்க.''

''........''

''என்ன பாக்குறீங்க.. உங்களுக்கு துணையா... உங்கள் கம்பெனி சுமையைக் குறைக்கத்தான்.''

''என்ன சொல்ற?''

''படிச்சிட்டு.. உங்களோட சேர்ந்து கம்பெனிக்கு வரப் போறேன்.''

''என்ன மாயா.. இன்னும் சின்னப்பிள்ளையாகவே இருக்க... பெங்களூரில் இருந்து தினமும் மெட்ராஸ் வந்து போவியா?''

''பெங்களூர் போனாதானே?''

''மேரேஜ்க்கு அப்புறம்?''

''அதான் எனக்கு ஆயிடுச்சே!''

''பைத்தியம் மாதிரி பேசாதே... உனக்காக கௌதம் மெட்ராஸ் வரமுடியாது.''

''வரவேண்டாம்!''

''அட பைத்தியம்.''

''பைத்தியம்தான்... ஆனா இப்போ இல்லை.''

''இதெல்லாம் கௌதமிற்கு தெரியுமா?''



''ஏன் தெரியணும்?'' எதிர்கேள்வி கேட்டாள்.

''உன் வருங்கால கணவர். டுடே லவ்வர்.''

''யார் சொன்னா அப்படின்னு.''

''என்ன சொல்ற?'' தலையைப் பிய்த்துக் கொள்ளாத குறைதான் விக்னேஷிற்கு.

''இன்னொரு தடவை வெர்ஜின் டெஸ்ட்டிற்கு ஆட்பட என்னால் முடியாது.''

''மாயா!'' அதிர்ச்சியோடு விக்னேஷ் எழ... மடியில் இருந்த ரிமோட் கீழே 'டபார்' என விழுந்தது. எழுந்தவனை நிமிர்ந்து பார்த்து...

''உட்காருங்க'' என்றாள். ஆனால் அவன் உட்கார முடியாமல் நின்றுகொண்டே இருந்தான்.

''உட்காருங்க.''

''..........''

''ஹலோ! உட்காருங்க'' என்றாள் மீண்டும்.

இண்டர்வ்யூ அட்டன் பண்ணும் கேன்டிடேட்டை போல் பவ்வியமாய்.. ப்யமாய்.. சோபாவில் உட்கார்ந்தான்.

''நல்லா உட்காருங்க'' அது அவன் காதில் விழுந்ததாய் தெரியவில்லை.

''வெ...ர்...ஜி...ன்.. டெஸ்ட்டா...?''

''ஆமாம்...''

''யாருக்கு நடந்தது.. யார்.. சொ...ன்...னா?''

''எனக்கே தெரியும்.''





''என்னம்மா சொல்ற?''

''சொல்ல ஒண்ணுமில்லைன்னு சொல்றேன்.''

''இல்லம்மா. நீ பாட்டுக்கு எதுவும் கற்பனை பண்ணிகிட்டு பேசாதே.. உளராதே.''

''உளரலை.. உண்மை.. கௌதம் பத்தி.. ச்சே வேண்டாம்.. அந்தப் பெயரைச் சொல்லும்போதே சாக்கடையை அள்ளிக் குடிச்ச மாதிரி இருக்கு.''

''தப்பு மாயா தப்பு.. அப்படி எல்லாம் சொல்லக்கூடாது... கௌதம் ரொம்ப நல்லவர்.''

''எப்போ விக்னேஷ் பொய்பேசக் கத்துகிட்டீங்க?''

''மாயா நான்'' கையைத் தூக்கித் தடுத்தான்.

''எனக்கு நன்றாய் தெரியும்.. என்னிடம் பேச வேண்டாம்.. பொய் பேசத் திறமை வேண்டும். அந்தத் திறமை உங்களிடம் இல்லை. ஸோ முயற்சி பண்ண வேண்டாம்.''

''நான் சொல்றதை முதல்ல கேளு.''

''கேட்டேனே.. நீங்களும் கௌதமும் பேசினதை இண்டர்காமில் கேட்டேனே.''

''மாயா.. அது.. வந்து'' எப்படி இது நடந்தது... இத்தனை நாள் எப்படித் தெரிந்தும் மறைத்துக் கொண்டிருந்தாள்.. அடுக்கடுக்காய் விடை தெரியாமல் கேள்வி மட்டும் எழுந்து எழுந்து அடங்கியது.

''நடந்தது எல்லாம் ரீகால் பண்ணி... என்னை நானே நோகடிச்சிக்க விரும்பலை. என்னைப்பற்றி சந்தேகம் வரக் கூடாது. அதுவும் காதலிச்சவனுக்கு.. கட்டிக்கப் போறவனுக்கு எந்தக் காரணம் கொண்டும் வரக்கூடாது... சந்தேகம்



வந்த பின்னால்... கல்யாணத்தை பத்தி பேசறதில் அர்த்தமே இல்லை.''

''அதுக்கில்லை.''

''நோ, எதுக்காகவும் கௌதமோட எனக்கு கல்யாணம் இல்லை''

''மாயா... ப்ளீஸ்.''

''ஐ ஸே... யூ ப்ளீஸ்... எங்கப்பாவைக் கூட நான் நம்பலை... ஏன் கடவுளே கூட நேரில்வந்து சொல்லியிருந்தாக் கூட நான் நம்பி இருக்கமாட்டேன். அந்தளவு நம்பிக்கையும் காதலும் எனக்கிருந்தது.''

''இல்லை மாயா.. உன்மேலே உள்ள நம்பிக்கை... ஓவர் பொசசீவ்... சந்தேகப்பட வச்சிருக்கலாம்.''

''இந்த டயலாக் எல்லாம் என்னிடம் வேண்டாம். உங்களுக்கு என் மேலே அன்பில்லை? இருக்கு என்னை நீங்க லவ் பண்ணுறிங்க. அதுவும் எனக்கு தெரியும். உங்களை அவமானப் படுத்தியவள்.. இப்படி எத்தனையோ ப்ளாக் மார்க் என்மேல் இருந்தும்.. நீங்க என்னை நம்பினீங்களே... என்னோட சந்தோஷத்திற்காக டைவர்ஸிற்கு அப்ளை பண்ணல... கொஞ்சம் கூட முகம் சுழிக்காமல் வாமிட்டை கையில் ஏந்தலை.. என்னை அந்த டெஸ்ட்டுக்குத்தான் கூட்டிகிட்டுப் போறாங்கன்னு தெரிந்ததும் துடிச்சிப் போகலை.. அதுக்காக போன் பண்ணி... அந்த துரோகி கிட்டே சண்டைக்குப் போகலை.. இதெல்லாம் எதனால.. என் மேல் உள்ள அன்பு.. ஃபெய்த்.. கரெக்டா... அயோக்கியனும் நல்லவனா இருக்கலாம். இது உங்க பார்முலா..நல்லவனும் அயோக்கியன்தான்னு சந்தேகப் படறது அவனோட பார்முலா.. நம்பவேண்டிய உங்களையோ.. என் அப்பாவையோ நான் நம்பலை.. நம்பக் கூடாதவனை

நம்பினதினால் எனக்கு கற்புன்னு ஒண்ணு இருக்கான்னே சந்தேகம் வந்திடுச்சே... இப்படி ஒரு சந்தேகம் என் மேல் வந்ததிற்காக நான் வருத்தப்படலை, வேதனைப்படலை. கௌதம் பத்தி தெரிஞ்சிகிட்டதிற்காக சந்தோஷம்தான்.''

''கௌதமிற்கு''

''தெரியாது.. சொல்லணும்.. கண்டிப்பா குட்பை சொல்லணும்... அதுக்காக நிச்சயம் அவன் வருத்தப்படமாட்டான். பட்.. ஏமாற்றமாக இருக்கும்... எனக்கு தெரிஞ்சிடுச்சேன்னு அவமானமாக இருக்கும்.. கொஞ்ச நாட்களுக்கு தூக்கம் வராது. அவ்வளவுதான்.''

''அப்போ உன்னோட வாழ்க்கை.''

சிரித்தான் சோகமும் இழையோடியது.

''வாழணும்.. சந்தோஷமாய் வாழ்வேன்.. காதல் கை கூடலைன்னு விரக்தியாகறவள் நான் இல்லை. ஒரு லவ் சக்ஸஸ் என்றால்.. கல்யாணத்தில் முடியணும். இல்லை கல்லறையில் முடியணும். இந்த மாதிரி பாதியில் பிச்சிக்கறது, சந்தேகப் படறது எல்லாம் காதலே இல்லை. நான் வேணா கௌதமை லவ் பண்ணி இருக்கலாம். ஆனா.. அவன் என்னை லவ் பண்ணலை.. ஸோ.. இது ஒரு.. ஒரு தலைக் காதல்... உண்மைக் காதலுக்கு உள்ள புனிதம்... இதைச் சாராது. ஐந்து பைசா உதவி பண்ணிட்டு.. பத்து பைசா உதவியை எதிர்பார்க்கிற இந்த உலகத்தில.. தான் காதலிப்பவன் தன்னைக் காதலிக்கணும்னு எதிர்பார்ப்பது தவறு இல்லையே.''

''தப்பில்லை.. ஆனா.''

''என்ன?''

''உன் வாழ்க்கையை நீ தான் டிஸைட் பண்ணணும். அதுக்கு குறுக்கே நான் வரலை... அதுக்காக எம்.பி.ஏ.வை வெளிநாட்



டில் போய்த்தான் படிக்கணுமா.. இங்கேயே படிக்கலாமே.. இப்போதைக்கு உனக்கு ஆதரவா நானும், எனக்கு ஆதரவா நீயும்தான் இருக்கோம். அதனால.. உனக்குன்னு ஒரு நல்ல வாழ்க்கை அமையறவரை உறவா.. ஆதரவா... கார்டியனா.. உன் பக்கத்திலேயே இருக்க ஆசைப்படறேன்'' தயங்கினாலும் தெளிவாகச் சொன்னான்.

''நீங்க சொன்னாலும் சொல்லாட்டியும்.. இப்போதைக்கு எனக்கு ஆதரவு, கார்டியன், உறவு எல்லாமே நீங்கதான். எனக்கு ஒரு சேஞ்ச் வேணும்... மன்னிக்கவும் முடியாம, மறக்கவும் முடியாம தடுமாற்றமா இருக்கு.. இங்கே வேண்டாம்... கொஞ்சநாள் எங்காவது எனக்கு தெரிந்த யாரும் இல்லாத இடத்தில் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதான் இந்த பாரின் ஐடியா.''

''கோர்ட்டில் கேஸ் நடக்குதே.''

''அது பாட்டுக்கு நடக்கட்டும்.. எந்தத் தீர்ப்பானாலும் நோ ப்ராப்ளம்... நான் இங்கே எந்தக் காரணம் கொண்டும் நிர்பந்தம் கொண்டும் இருக்க விரும்பவில்லை.''

''என்னைவிட்டுப் போக...''

''என்னைக்கு இருந்தாலும்.. நான் விட்டுப் போகிறவள் தானே!''

''இப்போ கூட...'' அதற்கு மேல் பேசாமல் நிறுத்திக் கொண்டான்.

பதினைந்து நாட்களுக்குள் பிடிக்கவேண்டிய ஆட்களைப் பிடித்து.. பாஸ்போர்ட் வாங்கிக் கொடுத்தான். அவளை சென்டாஃப் பண்ண விக்னேஷோடு மனோஜும் வந்தார். விக்னேஷ்.. டேக் ஆஃப் ஆகும்வரை இருந்துவிட்டுத்தான் வந்தான். வரும்போது மனது கனத்தது. இதயத்தில் இரத்தம்



கசிந்தது. 'உன்னைப் பரிபூர்ணமாய் நம்பும் என்னை உன் கண்களுக்கு தெரியாமலேயே போய்விடுமா? நான் உன்னை விரும்புகிறேன் என்று தெரிந்தும்... ஏன் விலகி விலகிப் போகின்றாள்?' நான் ஒரு அதிர்ஷ்டம் இல்லாத கட்டை. நொந்து போய் வீடு வந்து சேர்ந்தான்.

வீடே சூன்யமாய் இருந்தது. சலங்கை கட்டிய கால்கள் அதை இழந்து.. வெறும் காலாய் காட்சி தந்தது போல் பட்டது. அவள் இருக்கும் போதெல்லாம் இல்லாத காதல்.. அவள் இல்லாத போது பன்மடங்காய் உயர்ந்து.. பிரம்மாண்டமாய் உயர்ந்து நின்றது. அவள் மேல் தனக்கு ஆசையுண்டு காதலுண்டு என்று அவனுக்கே தெரியும். அது இந்தளவு வீரியமானது என்று இப்போதுதான் புரிந்தது. புரிந்து என்ன செய்ய.. நான் காதலிக்கிறேன் என்று தெரிந்தும்.. கௌதம் தனக்கு வேண்டாம் என்ற முடிவை அவள் எடுத்து இருந்தும். ஏன் என்னை மறந்து போனாள்? ஏன் நான் இப்படி எல்லாம் நினைக்கிறேன்? இதென்ன பைத்தியக்காரத்தனம்? கோர்ஸ் முடியும்வரை.. அவள் வரப்போவது இல்லை... நண்பனோ, துரோகியோ... அருகில் இருக்கும் போது அவரது அருமை, பெருமை தெரிவது இல்லை. விலகிப் போனாலோ.. பிரிந்து சென்றாலோ.. உள்ளத்தை பாடாய்படுத்தி விடுகிறது. அன்று முழுவதும் பற்களில் பச்சைத் தண்ணீர்கூடப் படாமல் சுருண்டு படுத்துக்கிடந்தான். வேலைக்காரர்களுக்கே அவனைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. அடுத்த இருதினங்களில் கலங்கிப் போன உள்ளத்தை தெளிய வைத்துக் கொண்டு.. எப்போதும் போல் இயல்பாகிப் போனான்.

மூன்றாவது நாள் இரவு.

கழுத்தோடு போர்வையை இழுத்துப் போர்த்த நினைத்த போது தான் இரண்டு நாட்களாய் டைரி எழுதாதது நினைவு வந்து எழுந்து உட்கார்ந்து... நைட் லேம்பை ஆஃப் பண்ணி



விட்டு... ட்யூப் லைட்டை.. போட்டு விட்டு.. டேபிள் ட்ராயரைத் துளாவினான், டைரி கையில் அகப்பட்டது. எடுத்துக் கொண்டு... சேரை டேபிள் அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு.... அமர்ந்தான். பென் ஸ்டேண்டில் தனக்குப் பிடித்த கலரில் உள்ள ஒரு பேனாவை உருவிக் கொண்டு.. இரண்டு நாள் முன்புள்ள தேதி உள்ள பக்கத்தைப் புரட்டினான். இரண்டாய் மடிக்கப் பட்ட கம்யூட்டர் ஷீட்...ஆச்சர்யமாய் புருவம் உயர்த்தி.. பிரித்துப் பார்த்தான். ராகவனோட லெட்டர் பேட்..அதில் மாயாவின் சாய்த்து சாய்த்து எழுதப்பட்ட குச்சி குச்சி எழுத்துக்கள்.. மாயாவின் கடிதத்தைப் பார்த்ததுமே.. ஆச்சர்யம் பலமான அஸ்திவாரத்தோடு அமர்ந்து கொண்டது.. படிக்கத் தொடங்கினான்.

*அன்பின் மொத்த குத்தகை உருவமே!*

*வணக்கம். என்ன விக்னேஷ்... வியப்பாக இருக்கிறது.. என்று தோன்றுகிறதா? காலையில் விமானத்தில் ஏற்றிவிட்டவளின் கடிதத்தை இரவே படிப்போம் என்று தோன்றியிருக்காது.. ஏன் எண்ணிக்கூட பார்த்து இருக்கமாட்டீர்கள். உங்களுக்கு இப்படி ஒரு கடிதம் எழுதக்கூட எனக்குத் தகுதி இல்லை என்று எனக்கு மிக நன்றாகவே தெரியும். உங்களுக்கு நான் கழுத்தை நீட்டியது என்வாழ்வில் நடந்த கசப்பான சம்பவமாகத்தான் எண்ணினேன். எப்போது வரை தெரியுமா.. என்னைத் தப்பா பேசினதும்.. சட்டுன்னு உங்க நண்பரோட காலரைப் பிடிச்சீங்களே.. அப்போது வரை.. ஒருத்தர் மேலே நல்ல அபிப்ராயம் தோன்றினாலே.. பிடிச்சிப்போகும்னு சொல்வாங்க.. அது எவ்வளவு உண்மை தெரியுமா..? அதுக்கப்புறம்.. உங்களைக் கணவனாவோ.. கார்டியனாவோ பார்க்கலையே தவிர.. உயிருக்கு மேலாக நேசிக்க கூடிய ஒரு நண்பனாக*

என்னால் பார்க்க முடிஞ்சுது. உங்களோட சின்ன அசைவுகூட எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. வாழ்ந்தால் இப்படிப்பட்ட ஒரு மனிதனோட வாழணும் என்று கூட நினைத்ததுண்டு.. இன்னமும் நீங்க என்னை நினைத்துக் கொண்டு இருப்பது தெரிஞ்ச போது.. எந்தளவு கஷ்டப்பட்டேன்னு எனக்கு மட்டும்தான் தெரியும். கௌதமோட நீங்க போன்ல பேசுனதைக் கேட்டபோது.. அவன் மேலே எனக்கு கோபம் வரலை. என் மேலே தான் வந்திச்சி.. கீழ்த்தரமான ஒருத்தன் மேலே நான் வச்ச... நம்பிக்கையும் காதலும்.. கண்ணியமான எங்கப்பாவோட உயிரையும்.. கனிவான உங்க காதலையும் கொன்னுடுச்சேன்னு என் மேலேயே தான் எனக்கு கோபம் கோபமாக வந்துச்சு. தாலியைக் கட்டிகிட்டும்.. புரட்சி பண்ணுவதாய் நான் எடுத்த அத்தனை முடிவிற்கும் காலம் சரியான தண்டனையைக் கொடுத்துவிட்டது. விக்னேஷ் என்னை மன்னிச்சிடுங்கன்னு உங்க காலில் விழுந்து கண்ணீர்விட எனக்கு அதிக நேரம் ஆகாது. ஆனா, என்னோட மனசாட்சி.. ஓங்கி அறைந்து விட்டது. இத்தனை நாட்கள் விலக்கி வைத்துவிட்டு.. இப்போது யாரும் இல்லை என்றதும் விக்னேஷ் வேண்டுமா? உன்னைப் போல் ஒரு சுயநலவாதியை நான் பார்க்கவில்லை என்று.. ஒவ்வொரு விநாடியும் குத்திக் கிழிக்கிறது. என்னை ஏற்றுக் கொள்ளும் மன்னிக்கும் மனம் உண்டு உங்களுக்கு.. அந்த இரக்கத்தை.. பலகீனமாக்கி பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை.

அதே நேரம்.. நல்லவன் ஒருவனைத் தேடிப்பிடித்து.. காதலித்து.. வாழவும் எனக்கு விருப்பம் இல்லை. உங்களை விட ஒரு உயர்ந்த மனிதரை, உள்ளத்தை, நான் இந்த ஜென்மத்தில் பார்க்கப் போவது இல்லை.



என்னை உங்களுக்குப் பிடிக்கும் என்ற காரணத்தினால் தான் இந்த கோரிக்கை.

விக்னேஷ்! எனக்கு உங்க மனைவிங்கற அங்கீகாரத்தைக் கொடுப்பீங்களா? நான் உங்களுக்கு உண்மையானவளாக இருப்பேங்ற நம்பிக்கை இருந்தால்.. நமக்குள்ளே ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை உங்களால மறக்க முடியுமா? நான் படிக்கமட்டும் புறப்படலை... மனசுக்குள்ளே ஏற்பட்ட தப்பான காதலை மறக்கணும். என்னை நானே சுத்தப்படுத்திக் கவும் தான். காதலுக்கும் நட்புக்கும் நூலிலை தான் இடைவெளி என்பார்கள். அந்த இடைவெளியை நான் தாண்டத் தொடங்கிட்டேன். நீங்க...? சிலநேரம் நல்ல நட்பும் நல்ல தாம்பத்தியமா மாறலாம்.

இத்தனை நிகழ்ச்சிக்கு பிறகும் என்னை நீங்க ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் வரும் காலத்திற்குள்.. உங்களுக்கு ஏற்றவளாய் ஒருத்தி தென்பட்டு.. நீங்கள் விரும்பினாலும்... நிச்சயம் என் வாழ்த்து உங்கள் இருவருக்கும் உண்டு. கணவன் உறவை நீங்கள் தராவிட்டாலும்.. கார்டியன் உறவு நிலைக்கும் என்று எனக்குத் தெரியும். நேரம் கிடைத்தால் நெஞ்சுக்குள் நானும் இருந்தால் கடிதம் எழுதுங்கள். போன் நம்பரை நான் சென்றதும் அறிந்து அனுப்பிவைக்கின்றேன். கோர்ட் கேஸை வித்ட்ரா பண்ணுவதும்.. கன்ட்னியூ பண்ணுவதும் உங்கள் விருப்பம். விருப்பம் எதுவானாலும் விரைவில் கடிதம் எழுதவும்.

இப்படிக்கு
உங்களை மட்டும் காலம் முழுக்க
காதலிக்கத் துடிக்கும் மாயா...



கண்களைத் தேய்த்துக் கொண்டு.. திரும்பத் திரும்பப் படித்தான். ஒவ்வொரு வரியையும் நாலைந்து முறை படித்தான். வரிவிட்டு வரியை தாவித்தாவிப் படித்தான். இருவரும் ஒரே எண்ணத்தோடு.. இப்படி ஒதுங்கி ஒதுங்கி இருந்திருக்கின்றோமே.. அவள் கடிதத்தை.. மடிக்க மனம் இல்லாமல்... நேராய் வைத்து.. மடிப்பை அப்படி ஒரு காதலோடு நீவிவிட்டான்... என் கடிதத்திற்காக மாயா காத்திருப்பாளே.. காத்திருந்து அவள் வாடக்கூடாது... உடனே.. பேப்பரை எடுத்து.. யோசிக்காமல் எழுதத் தொடங்கினான்.

என் உயிர் மனைவி மாயாவிற்கு...! உன் வரவிற்காக ஒவ்வொரு விநாடியும் காதல் பொங்க.. உயிர் உருக... காத்துக் கொண்டிருக்கும் விக்னேஷ் எழுதுவது.. என அவன் பாட்டிற்கு எழுதிக் கொண்டே போனான்... கவிதையும்.. இலக்கியமும் இணைந்து அவனுக்கு கைகொடுத்தது... நாலைந்து வரிகளுக்கு மேல் எழுதும் போது சிரித்தான். கண்கள் கலங்கி.. சொட்டு சொட்டாய் கடிதத்தில் விழுந்து.. அவன் காதலை அழகான கோலமாக்கியது.

# பந்தம் பாசம்



## 1

**செ**ல்வ விநாயகத்தின் வயது ஐம்பத்தி இரண்டு இருக்கும். இருபத்தி நாலிலேயே திருமணம். சாரதா என்றொரு அற்புதமான மனைவி. ஒரு காலத்தில் அந்த ஊர் பணக்காரர்களில் முதல் இடத்தில் இருந்தவர். மரியாதையுள்ள பெரிய மனிதர், தெருவில் நடக்கும்போது திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்கும் பெண்கள் எழுந்து நின்று மரியாதை கொடுக்கும் அளவு உயர்ந்த மனிதர். இருபத்தி ஏழு வயது பெரிய மகன் அரவிந்தன், அடுத்தவன் சிவா. இருபது வயது மீரா. பதினேழு வயது சுமதி என்ற இரு பெண்கள். அது மட்டும் அல்லாமல் சாரதாவின் தூரத்து